# புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம்௵ பிப்ரவரி௴ 15உ [ந. 31.

பிரஸங்கம் XXXI.

## ஆபிரிக்காவில் நிரக்ஷ ரேகைக்கு வடக்கே யுத்த வேலைகள்.

### ஜோஸ்யங்கள்—பலித்தவையும் பலிக்காதவையும்.

14—12—40-ல் யுத்த அறிக்கை நிலயத்தில் செய்த ‘எகிப்தும் யுத்தமும்’ என்ற உபந்யாசத்தில், சில ஜோஸ்யங்கள் சொல்லப்பட்டன. “வட ஆபிரிக்கா முழுவதையும் இதாலிய சாம்ராஜ்யத்தில் சேர்ப்பது முஸோலினியின் கனவு. இங்கிலாந்தின் படையெடுப்பில் முஸோலினியின் உதவிக்காக கொள்ளையில் இதை ஹிட்லர் அவனுக்கு வாக்களித்திருக்கலாம். இதுவரை படையெடுப்பு தோற்று விட்டது. கனவு கனவாகவே நிற்கிறது.........தன் பழைய நிலைமையில் நிற்பதுகூட இதாலிக்கு சிரம சாத்தியமாகிவிட்டது. சென்ற நாலு நாட்களாக ஜெனரல் வேவலின் கீழ் பிரிடிஷ் படை லிபியாவில் இதாலியின் வல பார்சத்தில் தாக்குதலை ஆரம்பித்து சோலத்திலிருந்து ஸிதி பாரானியை துண்டித்து விட்டது.........உலக சர்வாதிகாரிகளுக்கு எதிரிடையாக நடக்கும் இந்த யுத்தத்தில் எகிப்துக்கு ரொம்ப முக்கியத்வம் வாய்க்கப்போகிறது என்று ஜோஸ்யம் கூறுவதில் ஒரு பிசகுமில்லை.........யுத்தம் ஆரம்பித்தது முதல் நேசதேசங்களுக்கு எதிர்காலம் இப்பொழுதைவிட ஒருபொழுதும் நம்பிக்கை அளிக்கத் தக்கதாக இருந்ததில்லை.........”

இந்த ஜோஸ்யங்கள் எல்லாம் அளவுக்குமிஞ்சி நடைபெற்றதற்கு நாம் தெய்வத்துக்கும், ஜெனரல் வேவலுக்கும் அவர் கீழிருக்கும் சாம்ராஜ்ஜியப் படைக்கும் என்றும் கடமைப்பட்டிருக்கிறோம். ரோம்-பெர்லின் அச்சு முறிந்தது. தெற்குப்பாதி ஒடிந்து கீழேவிழுந்துவிட்டது. இனி நாம் போரிட வேண்டியது இதாலிய சாம்ராஜ்ஜியத்துடன் அல்ல. லிபியா, எரிட்ரியா, அபிஸீனியா, ஸோமாலிலாண்ட் இவைகளில் நடுங்கி நிற்கும் துரதிர்ஷ்டம் பிடுங்கும் சில தூக்குத் தூக்கான இடங்களைத்தவிர ஆபிரிக்கா கண்டத்தில் இதாலிய ஆதிக்கம் ஒழிந்தது.

## சரித்திரத்தில் விளங்கும் ஒரு ஏடு.

1940-ஹு நவம்பரில் ஈடன் மத்தியகிழக்குக்குப் பவனி செய்தார். அப்பொழுதே எகிப்திலிருக்கும் இதாலியப்படைகளைத்தாக்க எல்லா முஸ்தீபுகளும் மிக்க சிரத்தையுடன் செய்யப்பட்டன. ஆர். ஏ. எப் விமானங்களில் சிலது கிரேக்கயுத்தத்திற்குச் சென்றது, 7—12—40 வரை தாக்குதலை பின் ஒத்தி வைத்தது. பிறகு ஸர் மெயிட்லெண்டு வில்ஸன் கீழிருந்த பிரிடிஷ், சாம்ராஜ்ஜிய, சுயேச்ச பிரெஞ்சுப் படைகள் 75 மைல்கள் பாலைவனத்தை வெகுவேகமாகக் கடந்தன. தரை, கடல், ஆகாயப்படைகள் கடியாரம்போல் ஒத்துழைத்து ஸிடிபரானியைப்பிடித்தன. சர்ச்சில் சொன்னமாதிரி, 'இது ஒரு முதல்தரமான வெற்றி.' 3 இதாலியப்பட்டாளங்கள் அழிந்தன, 5 ஜெனரல்கள் பிடிபட்டார்கள், 30,000 கைதிகளும் ஏராளமான சாமான்களும் பிடிபட்டன. நெபோலியன் வெற்றிக்கு ஒரு எடை கூறினன்—'வெற்றி என்ருல், நீ பிடித்த பீரங்கிகளையும், கைதிகளையும்காட்டு.' இந்த சோதனையில் ஜெனரல் வேவல் முழுவதும் தேறினர்.

எகிப்தில் இதாலியர் படையெடுக்கும் பயத்தை இந்த வெற்றி நிவர்த்தி செய்தது. அப்பொழுது இதாலி இரண்டில் ஒன்றைச் செய்யவேண்டி நேர்ந்தது—இதாலிய கடற்படை பிரிடிஷ் கடற்படையுடன் யுத்தம் செய்ய வேண்டும்; அல்லது வட ஆபிரிக்காவிலிருக்கும் இதாலியப் படைகள் அழிய வேண்டும். "இந்த யுத்தம் பொருத்தவரை பொதுவாகவும், விசேஷமாகவும், ஆபிரிக்காவிலிருக்கும் இதாலியப் பிரதேசங்களை பிரிடிஷார் கைப்பற்றும் விஷயமாகவும் இந்த வெற்றியின் பயன் அபரிமிதமாக இருக்கப்போகிறது" என்று 21—12—40-ல் சொன்னேம்; இந்த ஜோஸ்யம் பலித்துவிட்டது. இதாலிய கடற்படையைப்பற்றி ஜம்பம் பேசினர்கள்; அதைச் சவால் செய்தும் அது சண்டை செய்யவில்லை. ஏட்ரியாடிக் கடலுக்குள் அது ஒளிந்தது. கேட்டவர்களுக்கு, ஊர் துறைமுகங்களுக்குள் அது பழகி வருவதாகச் சொல்லப்பட்டது. இரண்டாவதுகோடி பலித்துவிட்டது; வட ஆபிரிக்காவில் இதாலியப்படை அழிந்துவிட்டது.

## நீர்க்குமிழி உடைந்தது.

அல்பேனியாவில் தைரியசாலிகளான கிரேக்கர்களிடம் இதாலியர்கள் அடைந்த தோல்விகளின் உடன்காலில் இந்த தோல்விகள் நிகழ்ந்தன. இவைகளின் பலன்கள் சீக்கிரத்தில் தலைதூக்கிக்காட்டின.

வட ஆபிரிக்காவில் முதல்வார யுத்தம் முடியும்முன், இதாலிய தரை கடற் படைகளில் தலைகுப்புற மாறுதல்கள் ஏற்பட்டன. நிலத்திலும், நீரிலும் தோற்றதற்காக முன் நம்பிய படைத்தலைவர்கள், ஒன்று நீக்கப்பட்டார்கள், அல்லது ரஜாக் கொடுக்கப்பட்டார்கள். இதுவே அவர்களில் அநேகருக்கு உகந்தது; ஏனெனில் தொழில் முறையில் படைகள்மீது தங்களுக்கு இருந்த அதிகாரத் திடையே பாஸிஸ்டு அரசாங்கம் முட்டாள்தனமாக அடிக்கடி குறுக்கிட்டதைக் கண்டு அவர்கள் கண்டாளித்தார்கள். ராணுவ தலைவர் மார்ஷல் படோக்ளியோ 'ராஜிநாமாச்'' செய்தான்; கடற்படைத் தலைவர் அட்மிரல் காவக்னரியும் டோடிகானீஸ் தீவுகளின் கவர்னர் ஜெனரல் மேரியா டி வெச்சியும் 'தங்கள் கோரிக்கைப்படி' வேலை நீங்கினர்; வேறு இரண்டு பெரும் கடற்படை உத்தி யோகஸ்தர்கள் பர்திருப் செய்யப்பட்டார்கள். பாஸிஸ்டு பூதத்துக்கும் (முஸோலினி) அவன் குடும்பத்துக்கும் எதிராக உள்நாட்டு கலகம் செய்யவேகூட மார்ஷல் படோக்ளியோ, சமயம் வாய்த்தால், ஜனங்களால் அழைக்கப்படலாம் என்ற சூசனைகள் தோன்றின. அன்று முதல் முஸோலினியின் ஜாதகம் நன்றாக இல்லை. அவன் அதிகாரம் இறங்கிவிட்டது. 'டெய்லிஹெரால்ட்' பத்திரிகை எழுதியபிரகாரம் 'வயது முதிர்ந்த இந்தக் குற்றவாளியை குறித்து அடித்த அடி ஒவ்வொன்றும் உலகம் முழுவதும் சந்தோஷத்தை உண்டுபண்ணும். பாஸிஸத் தின் பாடையை கிரேக்கர்கள்தான் முதன் முதலில் தயாரித்தது; ஆனால், உலகம் உவக்க அதன் கயிறுகளை முடிவாக இறுக்கிக்கட்டியது, ஜெனரல் வேவல் தான்.'

## ஒரு ஒப்பற்ற யுத்த களம்.

பிரான்ஸிலும், பெல்ஜியத்திலும் யுத்தம் செய்யும் முறை வேறு. ஆப்பிரிக் காவில் யுத்தம் செய்யும் முறை வேறு. பிரிடிஷ் தீவுகளைப் பிடிக்க ஹிட்லர் தயாரிக்கும் படையெடுப்புக்கும், இதற்கும் கொஞ்சம்கூட ஒத்துமையில்லை.

வட ஆபிரிக்காவில் நாலு போர்முனைகளில் தற்பொழுது யுத்தம் நடை பெருகிறது.

(1) மத்தியதரை கடற்கரை ஓரத்தில் இருந்து எகிப்துக்கும் லிபியாவுக்கும் தென்மடல் ஓடும் எல்லைப்புறம்.

(2) செங்கடலில் இருந்து ஸூடானுக்கும் அபிஸீனியாவுக்கும் தென்மடல் ஓடும் எல்லைப்புறம்.

(3) அபிஸீனியாவுக்கும் கினியாவுக்கும் இடையில் உள்ள எல்லை.

(4) அபிஸீனியாவுக்கும் பிரிடிஷ் சோமாலிலாண்டுக்கும் இடையே ஓடும் எல்லை.

இந்த நான்கு எல்லைகளின் நீளம் பிரமாண்டம்—3,800 மைல்கள். யுத்தங் களை விமரிசனை செய்யும்பொழுது இந்த நெடுந்தூரங்களை நாம் ஞாபகம் வைத்துக்கொள்ளவேண்டும். இதாலி யுத்தத்தில் இறங்கியது முதல் இன்நான்கு

எல்லைகளிலும் பிரமாத வெற்றிகள் பெற்றதாக இதாலி ஜம்பமடித்துக் கொண்டது. குக்கிராமங்களைப் பிடித்து "பெரிய வெற்றிகள்" பெற்றதாகப் பிரசுரித்தார்கள். ஸ்வல்ப கவசம் பூண்ட மோட்டார்களைப் பிடித்து "பிரிட்டிஷாரின் படு தோல்வி" என்று பிரசுரித்தார்கள். ஸூடான், கினியா பிரிடிஷ் எல்லைக்குள் அனேக கிராமங்களை இதாலியர்கள் பிடித்தார்கள் என்பது உண்மையே. இதனால் ஜனங்கள் "இந்த இடங்களை நாம் ஏன் இழந்தோம்? இவைகளின் பந்தோபஸ்து போதாதா? இவைகள் சத்துருக்களின் கையில் விழாமல் ஜாஸ்தி துருப்புகள் அங்கு நிறுத்தி வைக்கவேண்டாமா?" என்று கேள்விகள் கேட்டது ஞாயமே.

இந்தக் கேள்விகளுக்கு இதுதான் பதில்:—

**சுமார் 3,800 மைல்கள் நீளத்துக்கு படைகள் நிறுத்துவது என்றால், கணக்கில்லாத் துருப்புகள் வேண்டும். உலகினிலே பெரிய படைகள் பிரான்ஸ் எல்லையில்தான் நின்றன. அந்த எல்லை சுமார் 1,000 மைலுக்குக் குறைந்தது.**

அவ்வாறே ஆபிரிக்கன் எல்லைகளில் படைகளை நிறுத்துவதாக வைத்துக் கொள்வோம். அதனால் பிரயோசனம் தான் உண்டா? இல்லை. எல்லையில் படைகள் மெலிந்த அளவுக்கே நிற்கவேண்டும். சத்துரு தன் படையை ஏதாவது ஒரு இடத்தில் திரட்டி அந்த இடத்தில் புகுந்து விடுவான். சத்துருவை எதிர்க்க நமது படைகளை ஒன்று திரட்டவேண்டும். அதற்குள்ளாக எதிரி படைகள் வெகு தூரம் உள்ளே சென்று முக்கியமான குறிகளைப் பிடித்துக்கொண்டு விடுவார்கள்.

ஆனதால், ஆரம்பத்தில் பிரிடிஷாரின் முன் நின்ற பிரச்னை இதுதான் :— குறைந்த பிரிடிஷ் படைகளை வைத்துக்கொண்டு இவ்வளவு விரிந்த பிரதேசங்களையும், இவ்வளவு நீண்ட எல்லைகளையும் எவ்வாறு பாதுகாப்பது? இதே பிரச்னை இப்பொழுது இதாலியருக்கு பிரிடிஷாரைக் காட்டிலும் அதிகமாக, உண்டாயிருக்கிறது.

அக்காலத்தில் வட ஆபிரிக்காவில் பிரிடிஷாரைவிட இதாலியார்கள் படைகள் பெரிது. ஏனெனில், ட்யூனிஷியாவில் பிரெஞ்சு படைகளின் உதவி பிரிடிஷாருக்கு எப்பொழுதும் கிட்டும் என்று எதிர்பார்த்தார்கள். தவிர அபிஸீனியர்களின் கலகங்களுக்கு அஞ்சி சமாதான காலத்தில் கூட அங்கே இதாலியர்கள் பெரும் படைகளை எப்பொழுதும் நிலைநிறுத்தவேண்டி வந்தது. பிரிடிஷ் பிரதேசங்களிலோ கலகங்களுமில்லை, படைகளுமில்லை.

## ஒரு விமரிசம்.

இது தான் யுத்த அரங்கத்தின் சன்னிவேசங்கள். மத்தியரேகைக்கு வடக்கேயுள்ள ஆபிரிக்காவில்—முக்கியமாக எகிப்து, லிபியா, எரிட்ரியா, அபிஸினியா,— இதாலியர்களுக்கும், பிரிடிஷாருக்கும் நடந்த யுத்தங்களை கவனிப்போம். மொராக்கோ, டான்ஜியர் இவைகளைப்பற்றி இதற்குள் ஒன்றும் சொல்லுவதற்கில்லை. விசித்திரமான டாக்கர் சம்பவத்தைக் குறித்து முன் ஒரு இதழில் கூறியிருக்கிறோம்.

## எகிப்து.

எகிப்தைக்குறித்து மற்றொரு இதழில் விரிவாகக்கூறப்பட்டிருக்கிறது. லிபியா குறுக்கே பென்காஸிவரை பிரிடிஷாரின் பலமான தாக்குதலுக்குப் பிறகு எகிப்துக்கு அபாயம் என்பது அறவே நீங்கியது. எகிப்தின் காபந்துக்கு தான் பொறுப்பு என்று பிரிடன் சொன்ன உறுதி நிலைநாட்டப்பட்டது. எகிப்து இன்றும், என்றும், பிரிடனின் கூட்டாளியாக இருக்கும். அதன் முன் சந்தேகங்களும் அரைகுறையானதும் நீங்கி அது இப்பொழுது உற்சாகத்துடனும், நம்பிக்கையுடனும் இருக்கிறது.

## லிபியா.

16-ம் நூற்றுண்டில் லிபியா துருக்கி வசமாகியது. 1911-வரை அதைச்சேர்ந்ததாக இருந்தது. 1911-ல் இதாலி அதை துருக்கியிடமிருந்து பிடுங்கிக்கொண்டது. 1912 அக்டோபரில் ஊஷி ஒப்பந்தம், அது கைமாறியதை வற்புறுத்தியது. 1928-ல் சுற்று முற்றும் உள்ள அநேக புல் பிரதேசங்களைச் சேர்த்து அது விரிவடைந்தது. அதன் தற்போதய விஸ்தீரணம் சுமார் 800,000 மைல். ட்ரிப்போலிடேனியா, ஸைரிநேகா, என்ற இரண்டு பிரிவுகள். ஸெனுஸி என்ற உள் நாட்டு ஜாதியர் மீது மார்ஷல் கிரேஸியினி கொடுங்கோன்மை இழைத்தான். இதாலியர்கள் கடற்கரையோரங்களைக் காவந்து செய்தார்கள். 9—2—41-ல் சர்ச்சில் லிபியா யுத்தத்தைப்பற்றி சொன்னதாவது: "யுத்தம் கற்பவர்களுக்கு என்றும் ஒரு படிப்பினையாக இருக்கப்போகும் எட்டு வாரங்களுக்குள்ளான ஒரு படையெடுப்பில் நானூறு மைல்களுக்குமேல் தாண்டப்பட்டன. 150,000 பேர்கள் அடங்கிய கிழக்கு இதாலிய படை முழுவதும் பிடிக்கப்பட்டோ, அல்லது அழிக்கப்பட்டோவிட்டது. இங்கிலாந்தும் வேல்ஸூம் போல் பெரிதான ஸைரிநேகா மாகாணம் முழுவதும் பிடிபட்டது. எகிப்தும் ஸூயஸ் வாய்க்காலும் பத்திரமாகிவிட்டன. பென்காஸி துறைமுகம், கொத்தளம், விமான நிலயங்களும் மத்தியதரை கடலின் கிழக்குமுனை யுத்தத்தில் நமக்கு மிகவும் முக்கியமான சாதகமாக இருக்கப்போகின்றன." பார்டியா, டொப்ருக், டெர்ணு, பென்காஸி இவைகளெல்லாம் பிரிடிஷ் தரை, கடல், ஆகாயப் படைகளின் ஒன்றுக்கொன்று பொருந்திய தாக்குதல்களுக்கு எதிராக மணல் வீடுகள்போல் விழுந்து பிடிபட்டன.

சுருங்கச் சொல்லில், ஜெனரல் வேவலால் லிபியாவில் நடத்தப்பட்ட படையெடுப்பு உலக சரித்திரத்திலேயே மிகுந்த கியாதிபெற்றதாகமட்டில் இல்லாமல், யுத்த சாஸ்திரத்தின் நூதன முறைகளுக்கு ஒரு உதாரணமாக விளங்கப்போகிறது. இனி எங்கெங்கு மிக்க வேகம், நெட்டுத்தூரங்கள், முப்படைகளின் ஒற்றுமை, இவைகள் அவசியமோ அங்கெல்லாம் லிபியாவில் "வேவலின் கண்காக்ஷி" மேற்கோளாகக் கூறப்படும். ஒருவரும் முன்பின் கேட்காத பெயர்கள் எல்லாம் பழமொழிகள் ஆகிவிட்டன. ஸிடி பரானி, சோலம், பார்டியா, டோப்ருக், டேர்ணு, பென்காஸி, இப்பெயர்களெல்லாம் ஆச்சர்யகரமான ஒரு

படையெடுப்பை விளக்குகின்றன. மார்ஸா மாட்ரு, என்ற இடத்திலிருந்து ஆரம்பித்த ருசிகரமான கதையின் சிகரம், சமீபத்தில் ஸைரிநேகா மாகாணத்துக்கு ஜென்ரல் வில்சன் என்பவர் ராணுவ கவர்னராக நியமிக்கப்பட்டிருப்பதுதான். இந்த நியமனம் வெற்றியடைந்த பிரிடிஷார் பிடிபட்ட நாடுகளுக்கு சர்வதேச சட்டப்படி ஒரு அரசியல் ஏற்படுத்தியிருப்பதைக் காட்டுகிறது. லிபியாப் படையெடுப்பின் 2-வது அங்கம் ஆரம்பித்துவிட்டது. வேவலின் துருப்புகள் ட்ரிபோலியை நோக்கிச் செல்லுகிறார்கள். ட்ரிபோலிடேனியா மாகாணமும் வெகு சீக்கிரத்தில் பிடிபட்டது என்று கேட்போமாகில் அதில் என்ன ஆச்சர்யம்?

## எரிட்ரியா.

வட ஆபிரிக்காவில் இதுவே இதாலிக்குச் சேர்ந்த பிரதேசம். அது ஒரு இதாலியன் காலனி. செங்கடலில் அதற்கு இரண்டு துறைமுகங்கள் உண்டு—மாஸவா, அஸாப். பிரிடிஷாருக்கு இப்பிரதேசத்தில் என்றும் ஒரு கண் உண்டு. ஏனெனில், இதாலி பிரிடனுக்கு சத்துருவானால் இந்தியாவுக்கும், தூரகிழக்குக்கும் போகும் கடல் மார்க்கத்தில் இதாலிக்கு இது பதுங்கித்தாக்க ஒரு இடமாகும். அத்துடன் செழிப்பான, ஆனால் கலகம் நிறைந்த, அபிஸீனியாவுக்குப் போக்குவரத்து மார்க்கமும் இதுவே. எரிட்ரியாவில் பிரிடிஷார்கள் படையெடுப்பின் மர்மம் இதுதான்:—எரிட்ரியாவிலும் அபிஸினியாவிலும் 200,000 இதாலியத் துருப்புகள் இருந்தார்கள். அவர்களுக்கு பாய்ச்சல் காட் டிக்கொண்டிருந்தாலொழிய இவர்கள் லிபியாவுக்குச்சென்று மார்ஷல் கிரேஸினியானிக்கு ஒத்தாசை புரிந்திருப்பார்கள்.

எகிப்துக்கு அபாயம் நீங்கினவுடன் பிரிடிஷார் தங்கள் முழு கவனத்தை பல கோணங்களில் இருந்து எரிட்ரியா, இதாலியன் சோமாலிலாந்து, அபிஸீனியா மீது பூர்ணமாக செலுத்த முடிந்தது. ஜனவரி முதல் வாரம் கினியாவுக்கும், அபிஸீனியாவுக்கும் இடையில் உள்ள பாலைவனத்தில் இருந்த பிரிடிஷ் துருப்புகளும், தென்ஆபிரிக்கா துருப்புகளும் இதாலிய எல்லைப் படைகளை உள்ளே விரட்டிக்கொண்டு போகிறார்கள். எரிட்ரியாவில் வடக்கிலிருந்து மாஸாவாவை நோக்கியும், தெற்கில் இருந்து அசாப்பை நோக்கியும், இருபகுதிகளில் பிரிடிஷார் படையெடுத்திருக்கிறார்கள். இம்மாத ஆரம்பத்தில் மாஸாவாவிற்கு ஓடும் ரயில்பாதையில் உள்ள அகோர்டாட்டும், பாரண்டும் பிடிபட்டன. முக்கிய துறைமுகங்களாகிய செரனும், அஸ்மாராவும், இன்று நாளை விழும்போலிருக்கின்றன. இன்றுவரை எரிட்ரியாவில் செம்பாதி பிரிடிஷ் சாம்ராஜ்ஜியப்படைகளின் வசம் இருக்கிறதென்று தைரியமாகச்சொல்லலாம்.

லிபியாவிலும், எரிட்ரியாவிலும் நடந்த யுத்தங்களில் இந்தியத் துருப்புகள் முக்கியமான பங்கெடுத்துக்கொண்டு அவர்களின் திறமைக்கும் தைரியத்துக்காகவும் மிகவும் போற்றப்பட்டிருக்கிறார்கள் என்று கேட்க நமக்கு மிகுந்த சந்தோஷமளிக்கிறது. 3—2—41ல டில்லியில் இருந்து வெளிவந்த ஒரு பிரசுரமானது கிழக்காப்ரிக்காவில் இந்தியப் படைகள் எவ்வாறு நடந்து கொள்ளுகின்றன

என்பதை விளக்குகின்றது. "இதாலிய எரிட்ரியா நமது இந்தியாவின் வடக்கேயுள்ள வாஜிரிஸ்தான் மாதிரியே இருக்கிறது" என்ருன் ஒரு இந்திய சிப்பாய். "எங்கள் வீடுகளில் விளையாடுகிற மாதிரிதான் இருக்கிறது" என்ருன் ஒரு இந்திய ராணுவ உத்தியோகஸ்தன். உலகின் புகழ் நமது இந்தியப்படைகளின் காதில் எட்டி மிக்க சந்தோஷப்படுகிறது.

## அபிஸீனியா.

இந்நாட்டின் பூர்வீக சரித்திரத்தை இங்கு விவரிக்க இடமில்லை. 1935ல் இதாலியர்கள் அதை அநியாயமாய் ஆக்கிரமித்தது இப்பொழுது அவர்கள் தலையிலேயே விடிந்தது. பாஸிஸ்டு சாம்ராஜ்ஜியத்தின் 'நடுநாயகம்' என்று கருதப்பட்ட அது, அதன் சொந்த அரசன், சொந்த ஜனங்கள் இவர்களையே மீண்டும் சேரப்போகிறது.

26—11—40ல் காமன்ஸ் சபையில் ஆர். ஏ. எப். பட்லர் 'பிரிடிஷ் ஸர்க்கார் எதியோபியா இதாலிய ஆக்கிரமிப்பிலிருந்து மீளுவதைக்காண கவலைகொண்டிருக்கிருர்கள். சத்துருவுக்கு விரோதமாக ஆயுதம் எடுத்திருக்கும் எதியோபியர்களுக்கு நாம் எல்லாவிதத்திலும் உதவிபுரிந்து வருகிருேம்' என்ருர். இவ்விதம் அளித்த உதவியின் பலன், அபிஸீனியாவில் பெரும் பாகத்தின்மீது இதாலியன் அதிகாரம் இப்பொழுது செல்லுகிறதில்லை. அவர்களுடைய அதிகாரத்தின் எல்லை நகரங்கள், முக்கிய ரஸ்தாக்கள் இவ்வளவுதான். முன்னும் சரி, இப்பவும் சரி, எங்கும் காபந்து கிடையாது. இதாலியன் ஆக்கிரமிப்பான ஐந்து வருஷங்களாக உள்ளூர குமுறிக்கொண்டிருந்த கலகத்தீ இன்று கொழுந்துவிட்டு எரிகிறது. ஜுலையில் பிரிடிஷ் ராணுவ உத்தியோகஸ்தர்கள் எல்லை தாண்டி அபிஸீனியாவுக்குள் நுழைந்தனர். பொறுமையுடனும், தைரியத்துடனும் ஆயுத மூட்டைகளுடன் சுமார் 400 மைல்கள் வரை உட்புகுந்து அங்கு வேரூன்றிக்கொண்டார்கள். அது முதல் நவீன யுத்த முறைகளில் பழகிய ஒரு அபிஸீனியப் படையைத் திரட்டியிருக்கிருர்கள். சென்றமாத நடுவில் அபிஸீனிய தேசபக்தர்களின் கலகம் வெளிப்படையாகக் கிளம்பியவுடன் எதியோபிய சக்கிரவர்த்தியாகிய ஹெய்லி ஸெலாஸி ஸூடானிலிருந்து தன் ராஜ்ஜியத்துக்குள் நுழைந்து இதாலியர்களுக்கு விரோதமாகத் தன் ஜனங்களிடையே தலைமைவகித்து வருகிருர். உள் நாட்டுத் தலைவர்களும், வீரர்களும் அவர் தேசக்கொடியின்கீழ் குழுமுகின்றனர். பிரிடன் அவர்களுக்கு நவீன ஆயுதங்களை வழங்கி வருகிறது. பிரிடிஷ் ராஜாங்கத்தாருக்கு அவர்களிடமிருந்து நன்றி பாராட்டி செய்திகளும் கிடைத்துவருகின்றன. முக்கிய ஸ்தானங்களுக்கு வெளியே தங்கள் அதிகாரத்தை நிலைநாட்ட சென்ற ஐந்து வருஷங்களாக இதாலி செய்த முயற்சிகள் வீணனது இக் கிளர்ச்சிக்கு இப்பொழுது அனுகுணமாக இருந்துவருகிறது. தேசத்தில் பெரும்பாகம் அபிஸீனியர்களின் ஆட்சிக்கே விடப்பட வேண்டியதாயிற்று. இவர்களில் ஒருவரும் அபிஸீனியாவின் கோவில்களின் மீதும், பாதிரிகளின் மீதும் வெடி குண்டுகள் எரிந்து தீயிலிட்டதை மறக்கமுடியாது. ஜனங்கள் மிக்க மதப்பற்று உள்ளவர்கள். இதுபோல் இதாலியர்கள் செய்த தவறுகள் ஓயாத

தொல்லைகளுக்கு இடங்கொடுத்தன. இவற்ருல் சாம்ராஜ்ஜியப் படையின் வேலைகள் மிகவும் எளிதாயின. சமீபத்தில் அபிஸீனிய சக்ரவர்த்தி ராய்ட்டர் நிருபர் மூலம் உலகிற்கு ஒரு செய்தி அனுப்பினர்:—"அடிஸ் அபாபாவில் இதாலியர்கள் தங்கள் வம்ச மிருகமான ஓநாயின் சிலை ஒன்றை வைத்து இருக்கிருர்கள். அதைப் பிடுங்கி எறிந்துவிட்டு ஜூடா சிங்கத்தின் சிலையை நாட்டுவேன். நான் சமீபத்தில் வந்து விட்டேனென்பது ஜனங்களுக்குத் தெரியும். பிரிடிஷ் ஸர்க்காரின் உதவியால் கலகமும் வலுவடைகிறது. என் ஜனங்களை நேரே வெற்றிக்குக் கூட்டிச் செல்லுவேன். இதாலியர்களின் தலைப்பூச்சி குறுகிவிட்டது. என் தேசத்தை மோசம் செய்த இதாலியத் துரோகியின் காலம் கிட்டிவிட்டது."

சக்ரவர்த்தியின் சபதமும் நிறைவேறும்போலிருக்கிறது. மேளதாளங்களுடன் புனர்பிரவேசம் நடக்கும்நாள் நெருங்கிவிட்டது. கிழக்கு ஆபிரிக்காவில் குடியேறிய இதாலியர்கள்.—முக்கியமாக அபிஸீனியாவிலுள்ளவர்கள்.—அவசர அவசரமாகப் பிரெஞ்சு சோமாலிலாண்டுக்குள் ஓடுகிருர்கள். ரோம் ஒத்துக் கொண்டால் எல்லா இதாலிய ஸ்திரீகளையும் குழந்தைகளையும் காலி செய்வதாக பிரிடிஷ் அரசாங்கத்தார் ஏற்கனவே தெரிவித்திருக்கிருர்கள். ஆனுல், இவ்வாறு இத்தாலியர்கள் ஒத்துக்கொண்டால் அது தோல்வியாக கருதப்படுமல்லவா?

இதுவரை இதாலியின் சம்மதம் கிடைக்கவில்லை. வடக்கே பிரிடிஷ் சாம்ராஜ்ஜியப் படை இதாலியர்களை ஸூடானிலிருந்து விரட்டியிருக்கிறது. மிச்சம் மீதியிருக்கும் இதாலியப்படைகள் எரிட்ரியாவில் சூழப்பட்டு உதைபடுகிருர்கள். அபிஸீனியா நான்கு பக்கங்களிலிருந்தும் தனிப்படுத்தப்பட்டுவிட்டது. மேற்கே இருந்து பிரிடிஷாரும், காங்கோ படைகளும் அதில் பிரவேசித்துவிட்டன. 11—1—41-ல் ஜொஹானஸ்பர்க்கில் ஜெனரல் ஸ்மட்ஸ் "1941-ல் தென்னுபிரிக்காவின் கடமை அபிஸீனியா, சோமாலிலாண்டு இவைகளிலிருந்து சத்துருவை ஓட்டுவதே" என்று கூறியிருக்கிருர். தெற்கிலும் மேற்கிலும், அவருடைய படைகளும், கினியாப்படைகளும் இந்த சபதத்தை நிறைவேற்றுகின்றன. அபிஸீனியாவில் இத்தாலிய ஆட்சியின் இறுதிகாலம் வந்துவிட்டது.

ஹெய்லி ஸலாஸி தன் ஸிம்மாசனத்தில் மறுபடி ஏறுவதைப்பொறுத்து பிரிடிஷாரின் கொள்கை என்னவென்பதை பிரிடிஷ் வெளிநாட்டு மந்திரி பிரகடனம் செய்திருக்கிருர்:—"பொருளாதாரமென்ன, அரசியலென்ன இவைகளில் எல்லாவித உதவிகள் புரிவோம். ஆயினும், அபிஸீனியாவில் எங்களுக்கு நாட்டாசை கிடையாது."

ஆபிரிக்காவில் சமீப காலத்தில் நடந்த யுத்தப்போக்கு மிகவும் திருப்திகரமாய் இருக்கிறது. ஜெர்மானியர்களும் முறியடிக்கப்பட்டால், எதிர்காலத்திலும் திருப்தி ஏற்படக்கூடும். ஆபிரிக்காவின் ஜனங்களுக்கு சுயேச்சையும், அபிவிருத்தியும் நெருங்கிவிட்டது. நம் தேசமாகிய இந்தியாவிற்கு ஏற்பட்ட மகத்தான பயமும் நீங்கிவிட்டது. சாம்ராஜ்ஜியத்தின் வர்த்தகம் முன்போல் கிழக்கே

இருந்து மேற்குக்கும், மேற்கேயிருந்து கிழக்குக்கும் நியாய மார்க்கத்தில் நடைபெறக்கூடும். ஆனால், மேலே சொல்லியிருக்கும் ஷரத்தைக் கவனியுங்கள். அது முக்கியமானது. ஹிட்லரையும், ஹிட்லர் மதத்தையும் அழித்துவிட வேண்டும். இது கைகூடும் வரையில் ராஜ விசுவாஸமுள்ள எவரும் தங்கள் முயற்சியில் சோர்வு அடையக்கூடாது.

வின்ஸ்டன் சர்ச்சிலின் 9—2—41 தேதி பிரசங்கத்திலிருந்து இரண்டு மேற்கோள்கள் மிக்கப் பொருத்தமானவை. அத்துடன் இக்கட்டுரையை முடிப்போம். "மாதங்கள் செல்லச்செல்ல நாஸிகளின் மிருகபலத்தாலும் இழிவான சூழ்ச்சிகளாலும் அமுக்குண்டு கிடக்கும் பீடும், களிப்பும் பொருந்திய அநேக தேசங்கள் இதுவரை உலகினில் எதுவும் இவ்வளவு அதிகமாகவும், வேண்டாவெறுப்புடனும் வெறுக்கப்படவில்லை என்று சொல்லக்கூடிய விதமாய், நாஸி அரசாக்ஷியின் பாரத்தை வெறுத்துவருகிறார்கள்."

பின்பும் ரூஸ்வெல்டுக்கு அவர் சொல்லிய, ஆனால் உலகினில் உள்ள எல்லா நல்ல மனிதர்களுக்கும் அன்வயிக்கக்கூடிய வார்த்தைகளில்,

"எங்களை நம்புங்கள். உங்கள் நம்பிக்கையையும் ஆசீர்வாதத்தையும் அளியுங்கள். கடவுள் புண்ணியத்தால் எல்லாம் நன்மையாக முடியும். நாங்கள் சளைக்கமாட்டோம். தோற்கமாட்டோம். நாங்கள் உறுதியை இழவோம். சோர்வடையோம். யுத்தத்தின் திடீர் தாக்குதல்களோ, அல்லது, ஜாகரூகதை, முயற்சி இவைகளின் நீண்ட இழுவைகளோ எங்களைக் களைக்கச்செய்யாது. கருவிகளைக்கொடுங்கள் ; வேலையை முடிப்போம்."

---

# வார யுத்தச் செய்திகள்.

(6—2—41 லிருந்து 12—2—41 வரை).

## செய்திச் சுருக்கம்.

இந்த வாரச் சம்பவங்கள் விசேஷமாக மத்திய தரைக்கடலைச் சுற்றி ஏற்பட்டு, இதாலிக்கு வரப்போகும் கேட்டைக் குறிக்கின்றன. பெங்காஸி நகரம் பிடிபட்டதிலிருந்து ஸிரிநேகா தேசமானது பிரிடன் வசமாய் விட்டது. பிரிடிஷ் சாம்ராஜ்யத் துருப்புக்கள் இதாலியின் இதர ஆபிரிக்கக் குடியேற்ற நாடுகளில் 5, 6 இடங்களில் முன்னேறிச் சென்று குரல் வளையைப் பிடித்தாப்போல் நெருக்கிக்கொண்டிருக்கின்றன. இதாலியின் முக்கியத் துறைமுகமான ஜினோவா யுத்தக் கப்பல்களால் தகர்க்கப்பட்டதோடு, அல்பேனியாவிலும் இதாலியர்கள் கடைசியாக நிற்கும் இடங்களிலிருந்தும் விரட்டப்படுகிறார்கள். இவை நிற்க,

பால்கன் நாடுகளில் யுத்தச் சின்னங்கள் காணப்படுகின்றன. பிரான்ஸிலோ அரசாங்கச் சூழ்ச்சிகள் சீக்கிரத்தில் விபரீதமாக முடியக்கூடியதாயிருக்கின்றன. பிரிடிஷ் முற்றுகையென்ற வலையில் அகப்பட்டுக்கொண்டு விழிக்கும் ஹிட்லர் வேறு எங்கே பாய்ந்து கேடு விளைக்கலாமென்று யோசனை செய்கிறார்: பால்கனையோ, அல்லது ஜிப்ரால்டரையோ அல்லது பிரிடனையோ தாக்கப்பார்க்கலாம். தூரகிழக்குப் பிரதேசத்தில் ஜப்பான் மத்தியஸ்தரென்ற அதிகாரத்தோடு நிற்காமல், பிரெஞ்சு-இந்து சைனா, தாய்லாந்து தேசங்களுக்குள் வியாபித்து அங்கிருந்து நெதர்லாந்தை ஆக்கிரமிக்க உத்தேசிக்கிறது. இந்த விதமாகத் தன்னைச் சுற்றி வீசும் புயலுக்கெல்லாம் அசையாது, யுனைடட்ஸ்டேட்ஸ் உதவி செய்வதாகத் தீர்மானித்திருக்கும் மசோதாவால் தைரியம்கொண்டு பிரிடன் எதிரிகளை எதிர்த்து, பிரெஞ்சுத் துறை முகங்களில் எதிரியானவன் பதுங்கி நிற்கும் ஸ்தலங்களைத் தகர்த்து வருகின்றது.

## பெங்காஸி பிடிபட்டது.

பெங்காஸியானது ஸிரினேகாவின் தலைநகர். ஜன நெருக்கமானது. இது மார்ஷல் கிரேஸியானியின் முக்கிய ராணுவ நிலையமாயிருந்த இடம். இது சென்ற வியாழக்கிழமை மாலை பிடிபட்டது.

இந்த வெற்றியானது யுத்த சரித்திரத்திலேயே மிகப் புகழ்ப்பெற்றதாகும்: ஒரு மாயா விநோதமென்றே இதைச் சொல்லலாம். பிரிடிஷ் படைகள் முன்னேறியது புலி பாய்ந்ததுபோலவே இருந்தது. நாள் ஒன்றுக்கு 150-மைல் போல வேகமாய் முன்னேறி, புதன்கிழமையன்று பார்ஸி சேர்ந்து, அதற்கு 60 மைலுக்கப்பால் உள்ள பெங்காஸி 36-மணி நேரம் தகர்த்து, 'வந்தேன், கண்டேன், பிடித்தேன்' என்ற மாதிரியாகக் கைவசப்படுத்தப்பட்டது.

இதிலிருந்து இதாலிய சாம்ராஜ்யம் அழிந்ததாகத்தான் முடியும். இதனுடைய முக்கிய அங்கமாகிய ஸிரிநேகாவின் கடற்கரை சிக்கிவிட்டது. இனி பாக்கி இடங்களைப் பிடிப்பது கஷ்டமல்ல. ஜெனரல் ஸர் மெட்லண்டு வில்ஸன் இந்தத் தேசத்துக்கு ராணுவ கவர்னராக பிரிடனால் நியமிக்கப்பட்டுவிட்டார். நைல் தீரத்துக்கும், ஸூயஸுக்கும் இனி ஆபத்துக்கிடையாது. இனி பெங்காஸி, கிரீட், கிரீஸ், அல்பேனியாவாகிய நான்கு புது இடங்களிலிருந்து இதாலியை எதிர்க்கலாம். பெங்காஸியிலிருந்து லிபியாவின் இருபாகங்களுக்குள்ளும், ரோட் ரயில் மார்க்கமாகச் செல்லலாம். பெங்காஸித் துறைமுகத்தில் பெரிய யுத்தக் கப்பல்கள் நிற்க முடியாதுபோனாலும், குரூஸர் கப்பல்கள் நிற்கப் போதுமான ஆழம் உண்டு. அதின் அருகாமையில் விமானங்கள் நிற்க நிலயங்களுமுண்டு.

முக்கியமாக இந்த வெற்றியிலிருந்து பிரிடிஷ் நேயர்களுக்குப் பயம் நீங்கி, பிரிடிஷ் விரோதிகளுக்குப் பயமுண்டாயிருக்கிறது. வெற்றி வருமோவென்று சந்தேகித்து உதவிசெய்யத் தயங்கிய அமெரிக்காவுக்கு இனி சந்தேகத்துக்குக் காரணமில்லை. பால்கன்ஸ், விஷி முதலான நாடுகள் இனி ஜெர்மனியைக்கண்டு

பயப்படவேண்டாம். இனி ஜெர்மனியும், ருஷ்யாவைப் பிடிக்க முந்திக் கொள்ள முடியாது.

## திரிபோலியை நோக்கி......எல் அகீலா பிடிக்கப்பட்டது.

400 மைலுக்கப்பாலுள்ள திரிபோலியைப் பிடிக்க பெங்காஸியைவிட்டு, பிரிடிஷ் சைன்யம் புறப்பட்டு, ஸிட்ராக் குடாக் கடலில் இருக்கும் எல் அகீலியாவைப் பிடித்துவிட்டது. இன்னும் 300 மைல் விஸ்தீரணமுள்ள பாலைவனத்தைத் தாண்டியாகவேண்டும். ஸப்ளைகள் வரவேண்டியதுதான் தாமதம். திரிபோலி பிடிபடுவது நிச்சயம்.

**ஆபிரிக்கப் படையெடுப்பைப்பற்றி.**—மிஸ்டர் சர்ச்சில் வெகு அழகாக வர்ணித்து தன் சந்தோஷத்தைப் பின்வருமாறு தெரிவித்திருக்கிறார் :—

இந்தச் சமயத்தில், ஜெனரல் வேவலுக்கு ஆபிரிக்காவைப் படையெடுத்து முன்னேறலாமென்று தோன்றிற்று. பிரிடன், இந்தியா ஆஸ்திரேலியாவிலிருந்தெல்லாம் சைனியங்கள் சேர்ந்தன. 'வேண்டியதைக் கேளுங்கள்-கொடுக்கப்படும்; படையெடுத்துப்பாருங்கள் ஜயித்துவிடலாம்' என்று வேதப்பிரமாண வார்த்தைகளைக்கொண்டு நான் தைரியம்கொடுத்தேன்.

'இதிலிருந்து, படையெடுப்புத் துவக்கப்பட்டு இரண்டு மாதங்களுக்குள்ளாக 400-மைல் முன்னேறிவிட்டது. ராணுவ சரித்திரத்தில் இதுவரையில் இவ்வளவுவேகமான முன்னேற்றம் கேள்விப்பட்டதில்லை.

150,000 இதாலியத் துருப்புக்கள் கொல்லப்பட்டும், பிடிக்கப்பட்டும் அழிந்து விட்டன. இங்கிலாந்துக்கும் வேல்ஸுக்கும் சம விஸ்தீரணமுள்ள ஸிரினேகா தேசம் முழுவதும் கைவசமாய்விட்டது.

**எரிடீரியா.**—பாரென்டோவிலிருந்து புறப்பட்ட இதாலியர்கள் இப்பொழுது அரீஸா, ஆஸ்மாராவை நோக்கி ஓடுகிறார்கள். ஒரு புதுவிடத்தில் எரிடிரியாவை வடகிழக்கு மூலையில் துளைத்துக்கொண்டு செங்கடல் சேர, மற்றொரு சைனியம் படையெடுத்து மெர்ஸா டக்ளை, கரோரா என்ற இடங்களைப்பிடித்துக்கொண்டது.

**அபிஸீனியாவில்.**—யுத்தம் நடத்துகொண்டிருக்கிறது. காண்டார்-ரஸ்தாவில் பிரிடிஷ் படையும், வால்காயிட் பிரதேசத்தில் தேசாபிமானிகளின் படையும், முன்னேறிக்கொண்டிருக்கின்றன. தென் ஆபிரிக்கத்துருப்புகள், கீன்யாவிலிருந்து புறப்பட்டு 48-மணிநேரத்துக்குள் 20-மைல் ரஸ்தாவை புதிதாகப் போட்டுக்கொண்டு கோரே என்ற இடத்தைப்பிடித்து அபிஸீனியாவுக்குள் 50-மைல் முன்னேறிவிட்டன.

அபிஸீனியாவை முன்போல் ஸ்வதந்திர நாடாகச்செய்து ஹெய்லிஸலாஸியை அரசராக மறுபடியும் ஸ்தாபிப்பது பிரிடனுடைய நோக்கமென்று பிரிடிஷ் அந்நிய நாட்டு மந்திரி காமன்ஸ் சபையில் 4-ம் தேதி சொல்லி விட்டார்.

**இதாலியன் ஸோமாலிலாண்டு.**—இங்கு பீலிஸ் குகானி என்ற ஒரு முக்கிய ஸ்தலம் பிடிபட்டது.

**அல்பேனியா.**—மத்திய அல்பேனியாவிலுள்ள டெபௌனி என்ற இடம் காலி செய்யப்பட்டது. வடபாகத்தில் ஸ்கும்பி நதி முகத்துவாரத்தில் சண்டை பலமாய் நடக்கிறது. வெகு கோரமாய் இதாலியர் சண்டை செய்து முன்னேறப் பார்த்த பிரயத்தனங்களெல்லாம் வீணாய்ப்போயின.

ஜெர்மன் துருப்புக்கள் ருமேனியாவிலும், பல்கேரியாவிலும் சேர்க்கப்பட்டு, கிரேக்கர்களுக்குப்பின்னிருக்கும் ஸலோனிகாவைப்பிடிக்கப் பிரயத்தனப்படுவதாக வதந்தி.

## ஜினேவா எதிர்க்கப்பட்டது.

சில வாரங்களாக ஜினேவாவுக்குப் போக்குவரத்து நின்று, ஜெர்மன் துருப்புகள் அவ்வழியாக ஆபிரிக்காவுக்குக் கொண்டுபோக உத்தேசமிருப்பதாகத் தோன்றிக் கொண்டிருந்தது. ஆனால், இந்த ஆசை யெல்லாம் இப்பொழுது நின்றிருக்கிறது. 9-ம் தேதியன்று பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள் ஜினேவாவைப் படையெடுத்து, 300 டன் நிறையுள்ள குண்டுகளை வீசி, எலெக்டிரிக், பாயிலர், ஹார்பர் தொழிற் சாலைகளையும், எண்ணெய் நிலையங்களையும் சேதப்படுத்திவிட்டன. இதாலியர்கள் எதிர்க்கவேயில்லை. மூடுபனியின் மறைவில் பிரிடிஷ்கப்பல்கள் வந்துவிட்டதாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

## யுத்தக்கப்பல் பெரிதா, விமானம் பெரிதா?

ஸிஸிலியில் விமான நிலையத்தை ஸ்தாபித்ததாக ஜெர்மனி சொல்லிக் கொள்வதற்குப் பதிலாக பிரிடிஷ் மத்தியதரைக் கடல் கப்பல் தலைவர் ஸர். ஆண்டுரூ கன்னிங்காம், 'இதாலிய விமானங்களோ ஜெர்மன் விமானங்களோ, எதைக்கண்டாலும் சுட்டுத்தள்ளிவிடுங்கள்' என்று உத்தரவு போட்டுவிட்டார். இந்த உத்தரவுப்படி நான்கு தினங்களாக பிரிடிஷ் கப்பல்கள் மத்தியதரைக் கடலில் சஞ்சரிக்கின்றன. எதிரி விமானம் ஒன்றாவது தலைகாட்டவில்லை.

## சண்டைக் கப்பல் பெரிதா, நீர் மூழ்கி பெரிதா?

சமீபத்தில், புது அதிகாரிகளை நியமனம் செய்யும் சமயத்தில், ஹிட்லருக்கு அடுத்த ஜெர்மன் தலைவரான ஹெஸ் என்பவர் 'இதுவரையில் சில்லரை எதிர்ப்புகளாயிருந்ததிலிருந்து இனி நீர் மூழ்கிப் போர் கடுமையாக நடத்தப்படும்' என்று 8-ம் தேதி பேசினார். ஆனால், இதற்குப் பதில் ஒரு ஜெர்மன் பத்திரிகை (டிரெஸ்டனர் நியூயஸ்ட் நாக்ரிக்டன்) கொடுத்துவிட்டது. 'யுத்தக் கப்பல்கள் பணக்காரர்கள் வைத்திருக்கும் விளையாட்டு சாமானல்ல; மிஸ்டர் சர்ச்சில் வீட்டில் கட்டியிருக்கும் ஐராவதமல்ல; இந்தக் கப்பல்களில்லாத தேசத்தை பிற தேசங்கள் மதிக்கமாட்டா' என்று எடுத்துக் காட்டியது.

## விமான எதிர்ப்புகள்.

சைனியங்களுக்குதவியாக, தரையிலும், கடலிலும், ஆபிரிக்காவிலும், அல்பேனியாவிலும் நடக்கும் போரோடு, புலாயின், டன்கர்க், கலே, ஆஸ்டெண்டு முதலான பிரெஞ்சுத் துறைமுகங்களைப் பகலில் பிரிடிஷ் விமானங்கள் எதிர்த்துக்கொண்டு வருகின்றன. டஸல் டார்ப், ஹனோவர், பெர்லின் முதலிய ஜெர்மன் நகரங்களும் எதிர்க்கப்பட்டன. ஏதோ சில ஜெர்மன் விமானங்கள் பிரிடன் மேல் பறந்து வந்ததைத் தவிர வேறு எதிரி எதிர்ப்பொன்றுமில்லை. பிராணிகள், பூண்டுகள், கிளிஞ்சல்கள் வைத்திருக்கும் காக்ஷிச்சாலை (Museum) ஒன்று லண்டனில் சேதப்பட்டது.

## ஜப்பான்.

இந்த இடத்தில் சின்னங்கள் சரியாயில்லை. அமெரிக்க கான்ஸலைக் கலந்துகொண்டு எபிஸ் கோபல் மதத்தலைவர், ஜப்பானில் வசிக்கும் தன் வகுப்பாளர்களான அமெரிக்கர்களைப் பிரயாணச் சீட்டுகளைப் பெற்றுக்கொண்டு ஊருக்குத் திரும்பத் தயாராயிருக்கச் சொல்லிவிட்டார்.

தாய்லாந்து விவகாரத்தில் ஜப்பானுடைய மத்தியஸ்தம் சாவதானமாய் நடந்துகொண்டிருக்கிறது. இன்னும் இரண்டு வாரங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

டோக்யோவில் நடக்கும் மத்தியஸ்தத்துக்குத் தாய் நாட்டுப் பிரதிநிதிகளின் தலைவராக வந்திருக்கும் வோராவாரு இளவரசர் தாய்-ஸ்தானிகராக ஜப்பானுக்கு அனுப்பப்படுவாராம். தாய்லாந்தில் ஜப்பான் ஒரு ஸ்தானிகரைத் தனக்காக நியமிக்குமாம்.

ருஷ்யாவோடு சிநேகம் செய்துகொண்டு, தென் திசையை நோக்கிப் படையெடுக்க ஜப்பான் யத்தனித்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

## பிரான்ஸ்.

ஆபிரிக்காவிலும், அல்பேனியாவிலும் ஆயுதப்போர் நடக்கிறது. ஆனால், பிரான்ஸி (விஷியி)ல் ராஜ்ஜிய தந்திரபோர் நடக்கிறது. பித்தலாட்டமும், நம்பிக்கைத் துரோகமும், சூதும், வாதும், ஏய்ப்பும் பலமாயிருக்கிறது. ஜெர்மன் தூண்டுதலால் ஏற்பட்ட புதுக்கக்ஷியை பிடேன் அங்கீகரிக்கவில்லை. கப்பல் தலைவர் டார்லான் பிரெஞ்சுக்கப்பல்களை ஜெர்மனிக்குக் கொடுக்க மறுத்துவிட்டார். வேகாண்டு சேனாதிபதி, ஆபிரிக்காவிலிருந்துகொண்டு பிரஜைகளை பிடேனுக்கு விசுவாஸம் காண்பிக்கச் சொல்லுகிறார். இதன் மத்தியில், ஜெர்மனி பிரான்ஸைத் தன்னோடு ஒத்துழைக்கச் சொல்லுகிறது. அதாவது ஏற்கனவே செய்துகொண்ட உடன்படிக்கையை ரத்து செய்துவிட்டு, பிரெஞ்சுக் கப்பல்களையும், துறைமுகங்களையும் கொடுக்கச்சொல்லுகிறது. சண்டையை மறுபடியும் துவக்க இறுதிகடிதம் அனுப்ப யோசனை செய்யக்கூடும். 'பிரான்ஸினிடம் இருந்து ஜாமீன் வாங்கிக்கொண்டு, மேலும் கடுமையான நிபந்தனைகளை விதிக்க வேண்டும்' என்று ஜெர்மன் ரேடியோ வெளியிடுகிறது.

ஜெர்மனியின் கையாளாகிய லவாலுக்கு மந்திரி பதவியைக் கொடுப்பதாகச் சொல்லியும், லவால் மறுத்து விட்டார். இவருடைய நண்பராகிய பிளாண்டினே எதிரிகளுக்குத் திருப்தியுண்டாக்க வேலையிலிருந்து நிறுத்தியாய் விட்டது. பிடேனுக்குப் பிறகு அதிகாரம் செலுத்த ஜெர்மன் அபிமானியாகிய டார்லானே நியமித்தாய் விட்டது. இதற்காக ஹிட்லரும், முஸோலினியும், பிரான்கோவும் ரகஸ்ய சம்பாஷணைகளே, மறுபடியும் பேச ஆரம்பித்து விட்டார்கள். இந்தச் சூழ்ச்சிகளின் முடிவு அடுத்த சில வாரங்களில் தெரிந்துவிடும்.

## பால்கனில் விபத்துச் சின்னங்கள்.

**ருமேனியா.**—பால்கன் நாடுகளில் மறுபடியும் வம்பு வரலாம். ருமேனியர் களைப் புது-ராணுவ முறைகளில் பழக்க வந்ததாக நுழைந்த ஜெர்மானியர்கள் இப்பொழுது படையெடுக்கும் ஒரு சைனியமாக மாறி, முக்கிய விடங்களில் முகாம் செய்கிருர்கள். ருமேனிய அதிகாரிகள் இதற்கு ஆக்ஷேபிக்கவில்லை. கருங்கடலுக்குச் சமீபத்தில் நாஸிகள் வந்து விட்டார்கள்.

ஆகவே ருமேனியாவில் வசிக்கும் பிரிடிஷ் ஸ்தானிகர் பிரயாணச் சீட்டைப் பெற்றுக்கொண்டு இரண்டொரு நாளில் பிரிடனுக்குத் திரும்பிவிடுவார். பிரிட னிலிருக்கும் ருமேனிய ஸ்தானிகரும் அதே மாதிரி புறப்பட்டு விடுவார்.

**பல்கேரியா.**—பல்கேரியாவிலும் அதன் அரசாங்கத்தின் சம்மதத்தின்பேரில் ஜெர்மானியர் நுழைந்து விட்டதாகத் தெரிகிறது. சாதாரண உடுப்புக்களை அணிந்துகொண்டு பிரயாணிகளைப்போல் வேஷம் தரித்து ஜெர்மன் பட்டாளங்கள் நுழைந்து கொண்டிருக்கின்றன. அங்குள்ள விமான நிலையங்களில் ஜெர்மன் சிப்பந்திகள் வேலை செய்கிருர்கள். ஏற்கனவே பல்கேரியாவின் வழியாக ஜெர்மன் சைனிய மொன்று தென்திசையை நோக்கி வந்துகொண்டிருக்கலாம் என்று பிரிடிஷ் பிரதம மந்திரி அபிப்பிராயப்படுகிருர்.

சில ருமேனிய தேசாபிமானிகள் ஹிம்சையைப் பொறுக்க முடியாது வெளி யேறி, லண்டன் சேர்ந்து 'ஸ்வதந்திர ருமேனிய சபை' யொன்றை அமைத்து (1) மைகேல் அரசரை விடுவிக்கவும் (2) இழந்த பிரதேசங்களைத் திருப்பவும் (3) ருமேனியாவை விடுவிக்கவும், (4) ஐரோப்பிய ஸ்வதந்திர புதுக்கூஷியில் தங்கள் தேசத்தைச் சேர்க்கவும் தாங்கள் கொண்டுள்ள நோக்கங்களை வெளியிட்டிருக்கிருர்கள்.

## பிரிடன்.

இவ்விதமாக நாலா பக்கங்களிலும் அடிக்கும் புயலைச் சட்டை செய்யாது எதிரியை சிக்ஷிக்கும் ஒரே காரியத்தில் நோக்கம்கொண்டு பிரிடன் மனம் குவிந்து நிற்கிறது. இந்தச் சமயத்தில் பிரிடனுடைய அந்தரங்கத்தைத் தெரிந்து சொல்லுவதற்கு மிஸ்டர் சர்ச்சிலை விட வேறு ஒருவரும் கிடையாது. 'வெற்றிபெறப்போகிருேம்' என்று சில தினங்களுக்கு முன் தன்னுடைய தீர்க்க சிம்ம தொனியோடு சொல்லிவிட்டார்.

'பிரிடனானது, ஐக்கியம் நிறைந்த பெரிய நாடு. அது உலக ஸாகரத்தில் முன்னேறி ஜயம் பெறுமாக. உலகத்தின் எதிர்கால க்ஷேமமே இதன் வெற்றியைப் பொறுத்திருப்பதை அறிந்து உலகமே பிரிடனுடைய வெற்றியைக் கோரிக்கொண்டிருக்கிறது', என்று சமீபத்தில் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் மிஸ்டர் சர்ச்சிலுக்கு நற்செய்தி அனுப்பினார்.

அதற்குப் பதிலாக, பிரதம மந்திரி, 'எங்களை நம்புங்கள், உங்கள் ஆதரவாலும், கடவுள் அனுக்கிரகத்தாலும் எல்லாம் நன்றாய் முடிவு பெறும். அஞ்சோம், தளரமாட்டோம், தடுமாற்றம் கிடையாது. சண்டை செய்வதாலும், உழைப்பதாலும், எதிரியை எதிர்பார்த்து நிற்பதாலும் அசரமாட்டோம். நீங்கள் மட்டும் எங்களுக்கு வேண்டிய ஆயுதங்களை அனுப்ப வேண்டும். நாங்கள் இந்தக்காரியத்தை வெற்றிகரமாய் முடித்துக் கொள்ளுகிறோம்' என்றார்.

ஏற்பட்டிருக்கும் விபத்தை உள்ளபடி தெரிந்துகொண்டு நிர்ப்பயத்தோடு எதிர்காலத்திய ஜயத்தை விமர்சனம் செய்வதே மிஸ்டர் சர்ச்சிலுடைய பெருமையாகும். அவர் எச்சரிக்கை செய்வதாவது :—

"இது சாதாரண யுத்தமல்ல. தோற்றால் நசித்துப்போவோம். பிரான்ஸ் தோல்வியடைந்தவுடன் நாமும் சண்டையை நிறுத்திவிடுவோமென்று நினைத்தது பொய்யாய்ப்போக, மாரிகாலத்தில், ஏராளமான தளவாடங்களைத்தயார் செய்து கொண்டு எதிரியானவன் நம்மை யெதிர்க்கப்பார்க்கிறான். விஷக்காற்றாலும், விமானக்கூடுகளைக் கொண்டு இறங்கியும், ஆகாயத்திலிருந்து சறுக்கி-இறங்கியும் படையெடுக்கப்பார்ப்பான். ஆனால், நாம் முன்யோசனையாலும், தைரியத்தாலும், விடாமனதாலும் ஜயிக்கலாம். பெரிய பட்டாளங்களைக்கொண்டு பல்கேரியா, ருஷ்யா, முதலிய இடங்களைப்பிடித்துக்கொண்டு இந்தியாவை நோக்கியும் போகப்பார்க்கலாம், ஆனால் முடிவில் அபஜயமென்பதற்குச்சந்தேகமில்லை."

நடப்புச் செலவு தினசரி $12\frac{1}{4}$ மில்லியன் பவுனுக்கு ஏறிவிட்டதால் அடுத்த ஏப்ரல் வரையில் 16,000 மில்லியன் பவுன் செலவு செய்ய காமன்ஸ் சபை பிரிடிஷ் கவர்ன்மெண்டுக்கு அனுமதித்திருக்கிறது. இது வரையில் இவ்வளவு செலவு கேள்விப்பட்டதில்லை.

பெவின் மந்திரி அமைத்திருக்கும் ஏற்பாட்டின்படி பிரிடனில் நடக்கும் தொழில்கள் 'அவசியமானவை', அவசியமில்லாதவையென்று இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, யுத்த தளவாடங்கள் செய்தல், விவசாயம், ஏற்றுமதி வியாபாரம் மூன்றையும் அவசியமான தொழில்களாகக் கருதப்பட்டிருக்கின்றன. வேலை நேரம், கூலி, அதிகாரம் முதலியன கவர்ன்மெண்ட் கையிலிருக்கும்.

## அமெரிக்கா.

6 நாட்கள் சர்ச்சை நடந்து, 165-க்கு எதிராக 260 வோட்டுக்களோடு, சில்லரை மாறுதல்களோடு பிரிடனுக்கு உதவி செய்யும் மசோதா அமெரிக்கா பிரதிநிதி சபையில் அங்கீகரிக்கப்பட்டது. இன்னும் 3 வாரங்களில்

செனெட்டில் வோட் செய்யப்படும். செனெட்டினுடைய அயல் நாட்டு கமிட்டியில் மசோதாவானது பிரஸிடெண்டுக்கு சர்வாதிகாரம் கொடுத்துவிட்டதாக ஜோஸ்ப்கர்ரன்னும், வீலரும் சாக்ஷி கொடுத்தார்கள்.

ரூஸ்வெல்ட் சொந்தத்தில் அனுப்பிய ஹாரிஹாப்கின்ஸனும், மற்றைய வெண்டல் வில்கியும், அமெரிக்காவுக்குத் திரும்பிவிட்டார்கள். ஹாரிஹாப்கின்ஸ் ஒரு மாதம் போல் சுற்றுப் பிரயாணம் செய்து பிரிடிஷ் மனதை அறிந்திருக்கிறார். வெண்டல் வில்கி ஒரு வாரத்துக்குள் வேகமாய்ச் சுற்றிப்பார்த்து பிரிடனை பகிர்முகமாகத் தெரிந்துகொண்டிருக்கிறார். வெண்டல் வில்கியானவர் ஊருக்குத் திரும்பும்போது ஜெர்மனிக்கு விடுத்த செய்தியாவது:—

'நானும் ஒரு ஜெர்மன் வம்சத்தில் பிறந்தவன்தான். வில்லிக்கி என்பது எங்கள் குடும்பப்பெயர். ஏகாதிபத்தியத்தை வெறுத்துத்தான் 90-வருஷங்களுக்கு முன் நாங்கள் அமெரிக்காவில் குடியேறினோம். நான் ஜெர்மன் வகுப்பைச் சேர்ந்திருப்பதில் பெருமையே, ஆனால், நான் கொடுங்கோலையும், ஆக்கிரமத்தையும், வெறுக்கிறேன். இப்பொழுது அதிகாரம் செலுத்தும் ஜெர்மன் அரசாக்ஷியை அமெரிக்கர்களாகிய நாங்கள் வெறுக்கிறோம்.'

'ஆயுதங்களைக்கொடுத்தால், நாங்கள் ஜயித்து விடுவோம்' என்று மிஸ்டர் சர்ச்சில் கேட்டதற்கு 'கூடிய சீக்கிரத்தில் நிரம்ப உற்பத்திசெய்து யுத்த தளவாடங்களை அனுப்புவதாக' மிஸ்டர் கார்டல்ஹல் வாக்குக்கொடுத்திருக்கிறார்.

## எதிரி கைவசப்படுத்தியிருக்கும் நாடுகள்.

**நார்வே.**—இளவரசர் ஒலாவுடைய ஆஸ்தியைப் பறிமுதல் செய்துவிட்டார்கள்.

**டென்மார்க்.**—டேனிஷ் டார்பிடோக் கப்பல்களில் ஜெர்மன் கொடியை நாட்டி ஜெர்மானியர்கள் ஓட்டுகிறார்கள். இது செய்துகொண்ட ஒப்பந்தத்துக்கு விரோதம்.

**பெல்ஜியம்.**—இந்த தேசத்தைப் படையெடுக்கும்போது 2,600-லக்ஷம் டாலர் பெறுமான தங்கம் பிரான்ஸின் வழியாக டாகருக்கனுப்பப்பட்டது. இப்பொழுது இதை ஜெர்மானியர் பிடுங்கிக்கொள்ள, பிரெஞ்சு பாங்கியின் பணத்தை இதற்குச் சரியளவு அமெரிக்கா நிறுத்திவிட அமெரிக்கா நியாய இலாகா உத்தரவு செய்திருக்கிறது. இம்மாதியான விவகாரத்தில் இதுவே முதல் வியாஜ்ஜியமாகும்.

**போலண்டு.**—பிடித்த தேசங்களில் எல்லாம் சைனியங்களை நிறுத்திவைத்து அடிமைத்தனம் நீங்காதிருக்க, அவைகள் செலவுக்குப் பணமும் வசூலிக்கிறார்கள். ஒவ்வொரு தேசத்திலிருந்தும், அதுவும் விசேஷமாக போலண்டிலிருந்து ஆயிரக் கணக்கான ஆண்களையும், பெண்களையும் கட்டாய வேலைக்கு ஜெர்மனிக்குக் கூட்டிக்கொண்டுபோகிறார்கள். தெருக்களில் நிற்கும் வாலிபர்களைத் திடீரென்று

பெற்ருேர்களுக்குத் தெரியாமல் லாரிகளில் ஏற்றிக்கொண்டு ஓடிவிடுகிருர்கள். போல் ஒருவனுக்கு ஒரு சுருட்டுக்கொடுத்துக்கூட ஸமத்துவம் காண்பிக்கக் கூடாது; அவனைச் சகோதரனென்று கூப்பிடக்கூடாது. சமீபத்தில் வேலை செய்யாது ஓடிவிட்ட போல் ஒருவனை டார்ட்மண்டில் சுட்டுவிட்டார்கள்.

**இதாலி.**—தென் அமெரிக்க வியாபாரத்தைக் கெடுத்து, ஐரோப்பாவைப் பட்டினிபோடுவதாக நாஸிகள் செய்யும் பிரசாரத்தை மறுத்துப் பேசுகையில், கப்பல் மந்திரி மிஸ்டர் ரோனல்ட் கிராஸ், 'ஜெர்மனியில் நல்ல ரொட்டியும், இதாலியில் 100-க்கு 50-பங்கு சோளம் முதலிய தானிய மாவுகலந்த மட்ட ரொட்டியும் விற்பனையாகிறதென்றும், ஆகவே இதாலியானது அடிமையைப் போல் நடத்தப்படுவதாயும் எடுத்துக் காட்டினர். ஐரோப்பாவுக்கு வேண்டிய உணவு ஐரோப்பாவில் இருக்கிறது: அதைச் சரிவரப் பங்கிட்டுக்கொடுக்க வேண்டும். ஜெர்மனி கொள்ளையடிக்கக்கூடாது. பிடிபட்ட தேசங்கள் ஸ்வதந்திரத்தைக் கேட்கின்றனவேயொழிய, பஞ்சம் வந்துவிட்டதாக உணவு கேட்கவில்லை.

---

| தேதி. | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **3—2—41.** (திங்கட்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | **கப்பல் நிற்தும் துறைகள், இன்னும் மற்ற ராணுவ முக்கியமான இடங்கள்.**— ப்ரெஸ்ட் (Brest). | ...... | மிகவும் பலத்த சேதம். |
| | **மற்ற இடங்கள்.**—வடமேற்கு பிரான்ஸ் (France). | 1 விமானம். | சேதம் அதிகம். |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | **பேர்க்கா (Berka) விமான நிலயம்.**— பென்காஸி (Benghazi). | ...... | பெரிய தீ கிளம்பிற்று. |
| | **ரயில்வே ஸ்டேஷன், ரோட்டில் போய்க் கொண்டிருக்கும் மோட்டார் வண்டிகள்.**— பார்ஸி (Barce). | | மோட்டார் லாரிகள் நாசமாயின. |
| | **பின்வாங்கிக்கொண்டிருக்கும் இதாலியத் துருப்புகள்.**—ஸ்லோன்டா (Slonta), டீனிஸ் (Teenis) இரண்டிற்கும் மத்தியில். | ...... | பல சிப்பாய்களுக்குக் காயம், |

| தேதி. | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 3—2—41. (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | இதாலிய ஆபிரிக்கா (Africa)—தொடர்ச்சி. | | |
| | சைனியம் முன்னேறுவதை பாதுகார்த்தல்.—எரிட்ரியா (Eritrea). | ...... | 1 விமானம் நாசம். |
| | விமான நிலயம், கட்டடங்கள்.—கூரா (Gura). | 1 விமானம். | ...... |
| | காப்வேன் (Gobwen) விமான நிலயம்.—கென்யா (Kenya). | நஷ்டமில்லை. | 5 விமானங்கள். |
| 4—2—41. (செவ்வாய்க்கிழமை). | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| | இரவில்.—கப்பல் துறைகள், ரிபேர் செய்யுமிடங்கள்.—செர்பார்க் (Cherbourg). | ...... | தகர்க்கப்பட்டன. |
| | ஆக்ரமித்திருக்கும் பிரேஞ்சு (French) துறைமுகங்கள்.—ப்ரெஸ்ட் (Brest), டன்கர்க் (Dunkirk), டையப் (Dieppe), ஆஸ்டெண்ட் (Ostend). | ...... | தீயும் வெடிகளும் கிளம்பின. |
| | விமான நிலயங்கள்.—வானிஸ் (Vannes), விரோதியினால் ஆக்ரமித்துக்கொள்ளப் பட்டிருக்கும் பிரான்ஸி (France)ல் சில இடங்கள். | ...... | சேதமாயின. |
| | இரண்டு ரயில்வே ஜங்ஷன்கள், ஒரு ரயில் தொடர்.-டஸ்ஸல்டார்ப் (Dusseldorf). | 4 விமானங்கள். | பெருந்தீ சூழ்ந்தது. |
| | இதாலிய ஆபிரிக்கா (Africa). | | |
| | மோட்டார் வண்டிகள்.—மாருவா (Maraua) வுக்கும், பார்ஸி (Barce)யிக்கும் மத்தியில். | | பலத்த நஷ்டம். |
| | ரயில்வே ஸ்டேஷன்.—பார்ஸி (Barce)... | | தண்டவாளங்கள் சேதமாயின. |

| தேதி. | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **4—2—41.** | (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa)—தொடர்ச்சி.** | | |
| | விமான நிலயங்கள்.—பெர்க்கா (Berka), பெனினு (Benina). | ...... | விமானங்கள் வைக்கும் கொட்டகையில் குண்டு வீழ்ந்தது. தீ பிடித்தது. |
| | போக்கு வரத்து சாதனங்கள்.—பென்காஸி (Benghazi). | ...... | ...... |
| | காவல் கார்த்தல்.—விரோதி பிரதேசங்கள். | ...... | 2 விமானங்கள். |
| | ஒரு பெரிய ஆகாயக்கப்பல்.—டோல்மேடா (Tolmeta). | ...... | 1 விமானம். |
| | விமானம் இறங்குமிடம்.—அஸோஸா (Azoza)வுக்கருகில். | ...... | 5 விமானங்கள் தீயால் நாசமாயின. |
| | விமானச்சண்டை.—அஸ்மாரா (Asmara) | ...... | 2 விமானங்கள். |
| | தரையில் இருக்கும் விமானங்கள்.—டெர்ரான்னி (Terranni), பாரெண்டு (Barentu). | ...... | 4 விமானங்கள் எரிந்து போயின. 3 விமானங்கள் சேதம். |
| | மோட்டார் வண்டி.—மெடெம்மா (Metemma)—கோண்டார் (Gondar) பாதை; மொகாலே (Mokale). | ...... | 3 விமானங்கள் நஷ்டம்; பல சேதமாயின. |
| | ஒரு சிறிய மோட்டார் துணைக்காவல் படை.—அஸ்மாரா (Asmara)வுக்கும், கெரெனு (Cheren)க்கும் மத்தியில். | ...... | ...... |
| | விமான நிலயம்.—கூரா (Gura) ... | 2 விமானங்கள். | ...... |
| | **இதாலிய டோடிகானீஸ் (Dodecanese).** | | |
| | மாரிட்ஸா விமான நிலயம்.—ரோட்ஸ் (Rhodes). | ...... | சேதமாயிற்று. |

| தேதி. | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **5—2—41.** (புதன்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | **பகலில்.—விமான நிலயங்கள், துறைமுகங்கள்**-ஆக்ரமிக்கப்பட்டிருக்கும் பிரான்ஸ் (France). | ...... | பலத்தசேதம். |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | **பேனினு (Benina) விமான நிலயம்.**—பென்காஸி (Benghazi), பெர்க்கா (Berka). | ...... | ...... |
| | **ரயில்வே ஸ்டேஷன்.**—பார்ஸி (Barce). | ...... | ...... |
| | **சைனியத்தை பாதுகாத்தல்.**—இதாலிய கிழக்கு ஆபிரிக்கா (Africa)வில் பல இடங்களில். | ...... | ...... |
| | **விமானச்சண்டை.**—பாரெண்டு (Barentu) | ...... | 2 விமானங்கள் பிடிபட்டன, 1 சுட்டுத் தள்ளப்பட்டது. |
| | **பீரங்கி வைக்கப்பட்டிருக்தும் இடங்கள்.**—செரென் (Cheren). | ...... | ...... |
| | **மோட்டார் வண்டிகள்.**—நெகாஸிட் (Negasit), பென்காஸி (Benghazi), பெர்க்கா (Berka), ஜெடாப்யா (Jedabya). | ...... | ...... 1 விமானம். |
| | **மோட்டார் வண்டிகள், கட்டடங்கள்.**—டெஸ்ஸி (Dessie). | ...... | தீப்பிடித்தன. |
| **6—2—41** (வியாழக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | **கப்பல் துறைகள், அதைச்சுற்றியுள்ள இடங்கள்.**—டன்கர்க் (Dunkirk), டீயப் (Dieppe), கலே (Calais), பெகாம்ப் (Fecamp), புலாயின் (Boulogne). | ...... | ரயில் பாதைகள் தகர்க்கப்பட்டன. தீப்பிடித்தது. கப்பல்கள் மேலும் குண்டுகள் வீழ்ந்தன. பலத்தசேதம். |

| தேதி. பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| **6—2—41.** (வியாழக்கிழமை)—தொடர்ச்சி | | |
| இதாலிய ஆபிரிக்கா (Africa). | | |
| விமானச்சண்டை.—அஸ்மாரா (Asmara). | ...... | 2 விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன. |
| தரையில் இருக்தும் விமானங்கள், பெட்ரோல் தொட்டிகள்.—பார்தார் (Bahr-dar)விமான நிலயம். | ...... | 3 விமானங்கள் நாசமாயின. |
| இருப்புப் பாதைகள், ராணுவ கட்டடங்கள்.—கெரென் (Cheren). | ...... | ...... |
| ஏற்றுமதி இறக்துமதி செய்யுமிடம்.—அஸாப் (Assab). | ...... | ...... |
| **7—2—41.** (வெள்ளிக்கிழமை). | | |
| ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| சாமான் கிடங்குகள், கப்பற் துறையிலிருக்தும் கட்டடங்கள்—புலாயின் (Boulogne). | ...... | தீப்பிடித்தன. |
| கப்பல் துறைகள், கப்பல்கள்—டன்கர்க் (Dunkirk). | ...... | கப்பல்கள் தாக்குண்டன. |
| கப்பல் நிற்குமிடங்கள்—கலே (Calais), ஆஸ்டெண்ட் (Ostend). | ...... | ...... |
| **8—2—41.** (சனிக்கிழமை). | | |
| ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| விரோதி சாமான் கப்பல்கள்—தென் நார்வே (Norway)-யின் கடற்கரை. | ...... | ...... |
| தொழிற்சாலைகள்—மான்ஹீம் (Mannheim). | ...... | ...... |
| ராணுவ முக்கியத்வம் வாய்ந்த இடங்கள்—ப்ளஷிங் (Flushing), ராட்டர்டாம் (Rotterdam). | ...... | ...... |

| தேதி. | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம், | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 8—2—41. | (சனிக்கிழமை)—தொடர்ச்சி. | | |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | காவல் கார்த்தல்—விரோதி பிரதேசம் | ...... | 8-விமானங்கள். |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விரோதி சைனியங்கள் மோட்டார் வண்டிகள், பீரங்கிகள் வைக்கப்பட்டிருக்கும் இடங்கள், இன்னும் இதர இடங்கள்—கெரன் (Cheren), கெரனை (Cheren)-ச் சுற்றியுள்ள இடங்கள். | ...... | பலத்த சேதம். |
| | விரோதி முகாம்—காரோரா (Karora) ... | ...... | பலருக்குக் காயம். |
| | தரையிலிருக்கும் விமானங்கள்—அலோமாடா (Alomata). | ... ... | 8 விமானங்கள் நஷ்டமாயின. |
| | முகாம்—டானு (Tsana)-ஏரிக்கு தெற்கே உள்ள டாங்கிலா (Danghila). | ...... | ...... |
| | விமானங்கள் இறங்குமிடம், கட்டடங்கள்—டெஸ்ஸி (Dessie). | 1 விமானம். | ...... |
| | கடல் விமான நிலயம்—ட்ரிபோலி ... | ...... | விமானக்கொட்டகைகள் தீக்கிரையாகின. |
| 9—2—41. | (ஞாயிற்றுக்கிழமை.) | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | கப்பல்துறைகள்.-ஆண்ட்வர்ப்(Antwerp). | ...... | ...... |
| | மற்ற இடங்கள்.—விரோதி ஆக்ரமித்திருக்கும் நாடுகள். | ...... | ...... |
| | விரோதி நாசகாரிகள்.-நார்வே(Norway) கடற்கரை. | ...... 1 விமானம். | 1 நாசகாரிமேல் குண்டுவீழ்ந்தது. |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | சாமான் கிடங்குகள், மோட்டார் வண்டிகள்-கெரென் (Cheren). | ...... | ...... |

| தேதி. | பிரிடிஷ், நேசதேச விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும் ; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **9—2—41.** (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa)**—தொடர்ச்சி. | | |
| | **விமானச்சண்டை.**—அஸ்மாரா (Asmara), படானு(Badana), அப்மாடு(Afmadu), டோடினிங் (Todenyng) கோட்டை. | ...... | 1 விமானம் சுட்டுத் தள்ளப்பட்டது. பல விமானங் களுக்குச் சேதம். |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | **விமானச்சண்டை.**—க்ளிஸுரா (Klissura). | ...... | 4 விமானங்கள். |
| | **விமானச்சண்டை.**—கெல்ஸைரி(Kelcyre). | 1 விமானம் | 4 விமானங்கள் நாசம். பல சேதமாயின. |

| தேதி. | விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதி களின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **4—2—41** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | **காலையில்.**—கிழக்கு ஆங்கிலிய (Anglian) பட்டணம், ஸப்பக் (Suffolk) கடற்கரை, | 1 விமானம். | சில கட்டடங்கள் நாசமாயின. |
| | கெண்ட் (Kent). | 1 விமானம். | சேதமேயில்லை. |
| | **பிற்பகலில்.**—தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம், கெண்ட் (Kent) கடற்கரை. | 2 விமானங்கள். | ...... |
| | **இரவில்.**—கிழக்குப்பிரதேசம், மிட்லண்ட்ஸ் (Midlands). | ...... | தீப்பிடித்தது. ஆனால் உடனே அணைக்கப் பட்டுவிட்டது. சிலருக்குக்காயம். |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | **மால்டா.**—(Malta) | ... 3 விமானங்கள். | சொற்ப சேதந்தான். |

| தேதி. | விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **5—2—41** (புதன்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—துணைக்காவல் கப்பற்படை—இங்கிலாந்தி (England)ல் தென் கிழக்குக் கடற்கரை, வடகிழக்கு ஸ்காட்லாந்தி (Scotland)ல். | 3 விமானங்கள். | ...... |
| | ஒரு இடம்.—கெண்டி(Kent)ல் ஒரு இடம் | 1 விமானம். | சேதமில்லை. |
| | இரவில்.—இங்கிலாந்தி (England)ன் கிழக்கு, தென்கிழக்குப் பாகங்கள். | ...... | சிலருக்குக்காயம். |
| **6—2—41.** (வியாழக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain)** | | |
| | இன்று பிரிடனி (Britain)ல் ஒரு இடத்திலும் படையெடுப்பு இல்லை. | ...... | ...... |
| **7—2—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain)** | | |
| | இன்று முழுவதும் விமான நடமாட்டமே இல்லை. | ...... | ...... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta) இரண்டு தரம் படையெடுப்பு இருந்தது. | ...... | பொது ஜனங்களின் சொத்துக்களுக்குச் சேதம். |
| **8—2—41** (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—தென் மேற்குக் கடற்கரை; தென் கிழக்குக் கடற்கரை; கிழக்குக் கடற்கரை. | 3 விமானங்கள் | சேதமேயில்லை. |
| | இரவில்.—விமான நடமாட்டமே இல்லை. | ...... | ...... |

| தேதி. | விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 9—2—41. (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | பிரிடன் (Britain). | | |
| | பகலில்.—பிரிடிஷ் துணைக்காவல் கப்பற் படை—வடகடல் (North Sea). | ...... | சேதமேயில்லை. |
| | இரவில்.—கிழக்கு ஆங்கிலியா (Anglia), எஸ்ஸெக்ஸ் (Essex), ஹோம் கவுண்டீஸ் (Home Counties). | ...... | சேதம் இல்லை. சிலருக்குக் காயம். |
| 10—2—41 (திங்கட்கிழமை). | | | |
| | பிரிடன் (Britain). | | |
| | இரவில்.—கிழக்கு, தென்கிழக்கு இங்கிலாந்து (England). | ...... | சேதம் இல்லை. வெகு சிலருக்குக் காயம். |

# யுத்தக் குறிப்புகள்.

## தாரதம்மியம்.

ஹிட்லர் என்ற ஒரு பேர்வழி சமீபத்தில் பெர்லினில் ஒரு பிரசங்கம் செய்தார். தன்னுடைய முந்திய பிரசங்கங்களைக்குறித்து "ஒரு மனிதனால் எவ்வளவு பேசமுடியுமோ அவ்வளவு பேசியிருக்கிறேன்" என்று புகழ்ந்து கர்ஜித்தார்; ஆனால், ஜெர்மானியரல்லாத நமக்கு அவர் புதிதாய் ஒன்றும் சொல்லவில்லை; தான் சொல்லிச்சொல்லி புளித்துப்போன பதங்களையுமே உபமானங்களையுமே உபயோகித்தார்; அவர் சொன்ன புழுகுகளும், சரித்திரத்தைப்பற்றி அவர் தெரிந்தே வேணுமென்று செய்த தப்பு வியாக்கியானங்களும் ஜெர்மானியரையே தலைகுனியச் செய்திருக்கும். அப்படியிருந்தும் உலகத்திலேயே முதல்தரமான பிரசங்கிகளிலொருவராக அவர் சிலசமயம் கருதப்படுகிறார்!

அவர் பேசி பத்துநாட்களுக்கெல்லாம் பிரிடிஷ் பிரதம மந்திரி உலகத்தாரையும் தன் தேசத்தாரையும் குறித்து ஒரு சொற்பொழிவு நடத்தினார். இன்றுகாலை அதை நான் ரேடியோவில் கேட்டேன்; என்னைப்போல் கேட்டவர்களில் எவருமே, அவர் செய்த பிரசங்கம் கேவலம் ஆர்பாட்டமல்ல, உண்மையான

பிரசங்கமென்றும், வெறும் தடபுடல் பேச்சில்லை, மனதிற்பதியும்படியான உசிதமான வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து தொகுத்த பேச்சென்றும், கேவலம் அவதூறு பேச்சில்லாமல் கம்பீரமான அலட்சிய பேச்சென்றும், பொய் நம்பிக்கை வைத்து ஒன்றுக்குப் பத்தாய்ச் சொல்லாமல் ஆழ்ந்தமர்ந்து காரியா காரணத்துடன் உண்டான நம்பிக்கையும் பொருந்திய பேச்சென்று ஒத்துக்கொள்வார்கள்.

Mr. சர்ச்சில் பேச்சு உயர்தரமான பேச்சு; அவர் தொண்டையைக் கிழித்துக் கொண்டு கத்தவில்லை; ஆயினும், விஷயத்தை நன்ருய் மனதில் வாங்கி அனுபவ பூர்வமாய் அறிந்த ஒருவர் பேசினுல் சில சமயங்களில் கேட்பவர் மனம் உற்சாகமடைவது போல் அவர் பேச்சைக்கேட்டு எல்லோரும் உற்சாகப்பட்டார்கள். பிரிடிஷ் பிரதம மந்திரியைப்பற்றி "சமயத்திற்கேற்ற மனிதன் தென்பட்டு விட்டார்" என்று பெரிய மனிதனும் சொற்பொழிவாளியுமான Mr. ரூஸ்வெல்ட் (Mr. Roosevelt)டும் சொல்லுவார் என்பதில் சந்தேகமில்லை.

## விஷயம் புலப்படட்டும்.

உலகப் போக்கைப்பற்றி 30 நிமிஷ நேரம் அவர் எடுத்துரைத்ததானது 3 வார காலம் பத்திரிகைகளை ஜாக்கிரதையாகப்படித்த பலனை அளிக்கும். ஆனுல், Mr. சர்ச்சில் (Mr. Churchill) நமது அனுமானங்களைத் திருத்தினுரென்ருவது அந்தரங்கங்களை வெளியிட்டாரென்ருவதில்லை. சிக்கலாகக் காணப்பட்ட விஷயங்களை அவர் வெகு அருமையாகச் சிக்கலெடுத்துத் தெளிவாகச் சொன்னுர்; பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்திலுள்ளவர்களுக்கும் அமெரிக்காவிலுள்ளவர்களுக்கும் அது அமிர்தமாயிருந்திருக்கும்; சர்வாதிகார நாட்டார்களுக்கு வெகு கசப்பாகயிருந்திருக்கும். பிரதம மந்திரி எக்ஷணி சொன்னது போல் வரப்போவதைப் பற்றிச் சொன்னதைக் கேட்பதில் ஒருவித உற்சாகமிருந்தது; அடியிற் கண்ட விஷயங்களைப்பற்றிக்கூட அவ்வித உற்சாகம் ஏற்பட்டது.

(a) பல்கேரியா அத்தியாவஸ்தையில் இருக்கிறது. பிரமித்துக் கிடக்கும் அரசியல் வாதிகளை விடுங்கள், மற்ற பேராவது Mr. சர்ச்சில் சொன்ன கம்பீரமான வார்த்தைகளைக் கேட்காமலிருந்தால், பல்கேரியா மூழ்கிப்போய்விடும்.

(b) பிரிடனே ஹிட்லரின் முக்கிய விரோதியானதால், நாஸிபலம் முழுவதும் சேர்ந்து பிரிடனை முந்தியோ பிந்தியோ தாக்கும்படி நேரிடும். அதுவும் தளகர்த்தர் ஸர் ஜான்டில் (Sir Johndil) ரேடியோ மூலம் சொன்ன பிரகாரம் 'முந்தியே" தாக்குவார்கள் என்று, பிரதம மந்திரி கோடி காண்பித்தார்.

(c) அமெரிக்காவிலிருந்து வரும் சாமான்களெல்லாம் நமக்கு முக்கியம் மட்டுமல்ல, ஜீவாதாரம் என்று ஜெர்மானியருக்கு நன்ருய்த்தெரியும்; ஆகையால், குளிர்காலத்தில் ஓய்வடைந்த வேளையில், சீர்படுத்தி அதிகரிக்கப்பட்ட விமானங்கள், நீர்மூழ்கிப் படகுகள் முதலியவைகளைக் கொண்டு நார்வே முதல் பிரான்ஸ் வரையிலுமுள்ள இடங்களிலிருந்து நமது கப்பல்களை அதிகப்பட்ட கடுமையுடன் தாக்குவார்கள்.

(d) இதுவரை ஆபிரிக்காவில் நமக்குக் கிடைத்த மகத்தான வெற்றிகளையும், நமது கப்பற்படைகளின் தங்குதடையற்ற சஞ்சாரத்தையும், பிரிடனில் நமக்குக் கிடைத்த விமானப்போர் வெற்றிகளையும், கிரீஸின் மகத்தான புனருத்தாரணத்தையும் கணக்கிட்டுப் பார்க்க, மனிதன் மனதிற்கே எட்டாத விதமான வெகு கடுமையான சண்டை அடுத்து வருமென்று ஏற்படுகிறது.

## முன் நிற்கும் விஷயங்கள்.

வரப்போகிற புசலை எதிர்த்துப் போராடுவதில் இவ்வளவு நம்பிக்கை Mr. சர்ச்சிலுக்கு உண்டாகும்படி செய்த விஷயங்கள் அடியிற்குறிப்பிடப்படுகின்றன. அவருக்குள்ள நம்பிக்கை நமக்கும் அவரிடமிருந்து வந்து விட்டது.

(a) சென்ற குளிர்காலத்திற்கு முன் பிரிடனைப் படையெடுக்கப் பார்த்து ஹிட்லர் தோல்வியடைந்தான் என்பதற்கு நல்ல ருஜு இருக்கிறது. கடலில் அவனுக்குச் செயலே கிடையாது; ஆகாயத்தில் ஆதிக்கம் பெற முயன்றான், ஆனால், அது நிறைவேறவில்லை, அந்தப் படையினும் சிறிய படையால் அவன் விமானப்படை தோற்கடிக்கப்பட்டது.

(b) பிரிடனுக்குக் கடலிலிருக்கும் பலம் பல முறை வெளிப்படுத்தப்பட்டது; அது எப்போதும் போல் இப்போதும் ஆக்ஷேபிக்கமுடியாத விதமாக இருக்கிறது; ("நமது கப்பற்படை முன்னிலும் இப்போது பலமாகவிருக்கிறது; அழைத்துச் செல்லும் கப்பற் கூட்டங்களும் ஜாஸ்தி"); இத்துடன் இதற்கு முன் அவர் சொல்லத் துணியாத மற்றொரு விஷயம் சொன்னார்; அதாவது, பகலில் ஆகாச ஆதிக்கத்தை பிரிடன் அடைந்துவிட்டது என்று சொன்னார் (இரவில் வரும் வெடிகுண்டு போடும் விமானங்களை மட்டும் எதிர்ப்பதில் இன்னும் கொஞ்சம் தேர்ச்சியடையவேண்டியிருக்கிறது போலும்).

(c) வெகு நாளாய் வேணுமென்று ஆவல் கொண்டிருந்த "சங்கியை சமத்துவம்" கிடைத்து விட்டதோ? அப்படித்தான் தோன்றுகிறது. அப்படியானால், விமானிகளின் நிரூபிக்கப்பட்ட உயர்வும், உபரியாக கைவசமிருக்கும் விமானிகள் சங்கியையும் விமான அமைப்பின் உயர்வும், எல்லாமாகச் சேர்ந்து முன்னிலும் ஜாஸ்தியாக நமக்கு அனுகூலத்தைக் கொடுக்க வேணும். உண்மையில், இன்னமுமொரு பலம் நமக்கு ஏற்பட்டுவிட்டது.

(d) தேசப் பாதுகாப்புப்படை அரைவாயர்களல்ல. நன்றாகத் தயாரிக்கப்பட்டதும், நல்ல ஆயுதபாணிகளுமான 1,750,000 பேர் கொண்ட உயர்ந்த பாதுகாப்புப்படை. போரையே தொழிலாகக் கொண்ட 2,000,000 பேர் கொண்ட ராணுவத்துடன் இவர்கள் சேர்ந்து வேலைசெய்வதானால், இவர்கள் இடிக்க முடியாத கற் சுவர் போல் இருப்பார்கள்.

(e) பிரிடனில் உணவுப் பொருள்களுக்குப் பஞ்சமில்லை; தேசத்தார் சரீர ஆரோக்கியமும் ஆச்சரியப்படும் விதமாக நன்றாயிருக்கிறது.

(*f*) இதாலியின் ஆபிரிக்க சாம்ராஜ்ஜியம் தொலைந்தது. ஆகையால் வெகு சீக்கிரத்தில் ஆகாயப் போரில் கைதேர்ந்த ஒரு படையின் பிரயோஜனம் பூராவும் பாக்கியிருக்கும் விரோதிகள் பேரில் உபயோகிக்கக் கைவசமிருக்கும்.

(*g*) அமெரிக்க ராணுவ பலம் நமக்குத் தேவையில்லையென்று Mr. சர்ச்சில் சொல்லுவது சாத்தியமாகி விட்டது. நமக்கு வேண்டிய ஒத்தாசை, ஏராளமான கப்பல்கள், யந்திரங்கள், யுத்த தளவாடங்களில்தான். "கருவிகளைக் கொடுங்கள், வேலையை முடிக்கிறோம்" என்று Mr. சர்ச்சில் Mr. ரூஸ்வெல்டுக்கு சொன்னார். "முடிக்கிறோம்" என்று அவர் சொன்ன வார்த்தையைக் கேட்டு நாம் தைரியப்படலாம்; பிரதிநிதி சபையானது 'குத்தகைக் கடன் மசோதா' விஷயமாய்க்கொடுத்த தீர்ப்பிற்குப் பிறகு, "கருவிகள்" ஏராளமாக அமெரிக்காவிலிருந்து வருமென்பதை யார் சந்தேகிக்கக்கூடும்?

## ஆனால்......!

சென்ற வாரம் இதில் நாம் சொன்னபடி நாம் கையைக் கட்டிக்கொண்டு சும்மாவிருக்க முடியாது. முக்கியமாக இந்தியாவில் முடியாது. தென் கிழக்கு ஐரோப்பாவில் நடக்கும் தயாரிப்புகளை கவனிக்க, ருமேனியா படுத்துப்போனதை கவனிக்க (இந்தப் பத்திரிகை வெளிவரும் தினம் அங்குள்ள நமது ஸ்தானிகர் திரும்பிவிடப் போகிறார்!) பல்கேரியாவில் "சமாதானமாகப் புகுவது" என்பதையும் அத்தேசத்தின் நம்பிக்கைப்படமுடியாத சிநேகத்தையும் கவனிக்க, இந்தியாவிற்கு ஆபத்தில்லையென்று சொல்லமுடியாதென்று பிரதம மந்திரி ஸ்பஷ்டமாகச் சொன்னார்.

தூரக்கிழ் தேசத்திலிருக்கிற படபடப்புள்ள ஜப்பானியர்களை அவர் சொல்லவில்லை. சீனாவில் ஒன்றும் நடவாமல் போட்டது போட்டபடி இருக்கும் நிலை அவர்களுக்கு வெகு சலிப்பாயிருக்கிறது; நமது கீழ் கடவான சிங்கப்பூரிலும் அவர்கள் ஜம்பம் பலிக்காது. மூவர் உடன்படிக்கை சும்மா ஹிட்லர் செய்யவில்லை; தனக்குத் தேவையுண்டானால் ஜப்பானை கிணற்றில் அநேகமாகத் தள்ளுவான்; ஒருவர் மாண்டாலும் சரி, இருவரும் மாண்டாலும் சரி, அப்படிச் செய்வான். இல்லை, முயற்சி என்பதே நமது மந்திரம்—அதிகப்பட்ட முயற்சி, தொழிற்சாலைகளிலும், வயல்களிலும், பொதுவிலும், தனிமையிலும், தாராளத்துவம், ராஜவிசுவாஸம், ஒற்றுமை, இவையெல்லாம் நமது கடமை.

## சாயம் வெளுத்தது.

ராணுவ இலாகா பேர்வழிகள் எவ்வளவு வீசினபோதிலும் ஜப்பானியர் ஒருவருக்குமே இதிலொன்றும் பிடித்தமில்லை. ஜப்பானியர் நாஸூக்கும் நயமும் பொருந்தியவர்களானபோதிலும், "உண்மையான தெய்வ பக்தியுடன்" இச்சமயத்தில் நடந்துகொள்ளவேண்டுமென்று அமெரிக்காவைத்தணிந்து கேட்டதானது, கடைந்தெடுத்த பேர்வழிகளான ஜப்பானியரே இதென்ன பெரிய வில்லங்கமாக இருக்கிறதேயென்று எண்ணினதாகத் தெரிந்தது. மூவர் உடன்படிக்கை இந்த வில்லங்கத்தில் அவர்களை இழுத்துவிட்டது. பிரான்ஸ் படுத்தவுடன், ஜெர்மன்

குருவிதான் ஜயிக்கும் குருவியென்று ஜப்பானியர் எண்ணினார்கள். பிரிடனுக்கு யுத்த தளவாடங்கள் கொடுக்காமலிருக்கும்படி செய்யவேண்டி அமெரிக்காவிடம் கடுபுடியாக அமட்டிக்கொண்டிருக்கவேணுமென்றும், இதற்குப் பிரதி பிரயோஜனமாக பஸிபிக் பக்கமும் கீழ் இந்திய சாம்ராஜ்ஜியத்தையும் ஜெர்மனி ஜப்பானுக்குக் கொடுப்பதாகப் பேச்சு.

அவர்கள் கட்டிய ஆகாயப் பந்தலில் அடியிற்கண்ட கூடம் தாழ்வாரங்கள் சேர்ந்தவை :—

(*a*) Mr. வாங்க் சிங்க் வெய் (Mr. Wang Chung Wei)-யின் பொம்மை ஆட்சிவய ஜப்பானின் வெற்றிக்கு அடையாளமாகப் பாவித்துக்கொண்டு ஜப்பானிய ஆக்கிரமணத்தைச் சீனாவிலிருந்து தெற்கேயும், தென்மேற்கிலும் செலுத்துவது.

(*b*) ஜப்பான் ருஷியாவுடன் மஞ்சுகோ சம்பந்தமாக உடன்படிக்கை செய்து கொள்ளுகிறது ; சீனாவிற்கு பிரிடன் செய்யும் உதவியை ஹாங்க் காங்க் (Hong-kong)-ஐயும் சிங்கப்பூரை (Singapore)யும் அமட்டுவதால் நிறுத்துவது.

(*c*) இண்டோ—சீனத்திலும், சீயத்திலும், டச்சு கீழ் தீவுகளிலுமுள்ள எண்ணெய் முதலிய முக்கிய சாமான்களுக்காக முதலில் சாவதானமாகவும் பின்னால் அவசியமானால் பலாத்காரமாகவும் ஏற்பாடு செய்கிறது.

## நடப்பும்—திட்டமும்.

இந்தப்புதிரில் பொருந்தியதுபோல் காணப்படும் (*c*)-ஐ முதலில் கவனிப்போம். வியாபார வகையிலும், ராணுவ வகையிலும் இண்டோ—சீனாவில் ஜப்பானுக்குச் சில சௌகரியங்கள் கிடைத்திருக்கின்றன. டச்சு கீழ் தீவுகளில் இருந்து கொஞ்சம் எண்ணெய் கிடைத்திருக்கிறது. ஆனால், அது மட்ட எண்ணெய், விமானங்களுக்கு லாயக்கான உயர்தர எண்ணெய் அல்ல.

பேரேட்டில் பத்து ' கலத்தில் ' தொகைகள் ஜாஸ்தி.

(*a*) தென்கிழக்கு சீனத்திலிருந்தும் நான்கிங்கி (Nanking)-லிருந்தும் ஜப்பானியர் பின்வாங்கியதிலிருந்து அவர்கள் மதிப்புக் குறைந்தது ; சங்கிங்கில் (Chungking), சீயாங்-கெய்-ஷேக் (Chiang Kai Shek)-கின் பலம் குறையவில்லை.

(*b*) சட்ட சபையில் இவைகளைப்பற்றி சமாதானம் சொல்லும்படி நேரிட்டது. சீனாவில் 1,000,000 துருப்புகள் சேதமானதும், சீன தளகர்த்தர் கையில் 2,000,000 துருப்புகளும் 200 விமானங்களும் இருக்கின்றனவென்பதும் ஜப்பானியருக்குத் திருப்திகரமாகவில்லை.

(*c*) ருஷியாவுடன் உடன்படிக்கை ஏற்படவில்லை ; மேலும், சீனாவிற்கு உதவி புரிந்து வருவதாகச் சொன்னதுடன் சாமானுக்கு சாமான்கொடுத்து வியாபாரம் நடத்துவதாக உடன்படிக்கை இருதேசத்தாரும் செய்துகொண்டார்கள்.

(*d*) பிரிடன் தலைநிமிர்ந்து நிற்கிறது.

(*e*) ஜப்பானியரும் ஜெர்மானியரும் எதிர்பார்த்ததற்கு நேர் விரோதமாக இருக்கிறது அமெரிக்கரின் நடவடிக்கை. பிரிடனுக்குத் தளவாடங்கள் ஜாஸ்தியாக அனுப்பப்படுகின்றன, சீனாவிற்கு கடன் கொடுத்திருக்கிறார்கள், ஸ்தானிகர் மூலமாக ஜப்பானிடமுள்ள தாக்ஷண்யம் இன்ன அளவுதான் என்றும் குறிப்பிடப் பட்டது.

(*f*) ஜப்பானிலும் உள்நாட்டில் காரியங்கள் க்ஷீணித்துவிட்டன. சீனா "சம்பவத்தால்" ஜப்பானுக்கு 1,000,000 துருப்புகள் சேதம், இன்னமும் 1,500,000 துருப்புகள் சீனாவில் மாட்டிக்கொண்டிருக்கின்றன. போக்குவரத்தில் கட்டைபோட்டதால் ஐரோப்பாவுடன் வியாபாரம் கம்மிப்பட்டுவிட்டது. முக்கிய ஏற்றுமதிகள் சம்பந்தமாக பிரிடனும் அமெரிக்காவும் பெருந்தடைகள் ஏற்படுத்தி விட்டார்கள். சிக்கனங்கள் பல—ஒருவேளை அரிசிச்சோர், ஸ்திரீகள் தலைமயிர் "சுருட்டல்" கூடாது. ஆண்பிள்ளைகளுக்குப் புகையிலை கிடையாது என்றாலும், சோற்றிற்காகக் கடைகளில் காற்றிருக்கும் ஆள்கூட்டம் குறையவில்லை; செலவு திட்டமோ, அமைதியான நாளில் வருஷம் ஒன்றுக்கு 3,000,000,000, 'யென்'னாக இருந்ததில் இப்போது 12,000,000,000, 'யென்'னாக இருக்கிறது.

## நாஸியும்—பாஸிஸ்டும்.

வேணுமென்றே, முன்யோசனையுடன், ஹிட்லர் முஸோலினிக்குச் சகாயம் செய்யுமுன், அவனை விலங்கத்தில் மாட்டிவிட்டான். காபொரெட்டோ (Caporetto) விற்குப்பின் பிரிடனும் பிரான்ஸும் செய்த உதவிபோலில்லாமல் வேறு தினுசு உதவி ஹிட்லர் செய்வான்! "பொருளாதார கோஷ்டிகள்" தலைமையில் Dr. க்ளாடியஸ் (Dr. Clodius) போவதையும், இதாலிய போர் இலாகாக்களில் ஒருமனதான தலைமையை உத்தேசித்து ஜெர்மானிய அதிகாரிகள் நியமனமாவதையும் பார்க்க, வெகு சீக்கிரத்தில் இதாலியே ஜெர்மானியர் கைவசமாகிவிடும் போலிருக்கிறது.

பேஷாய் எடுத்துக்கொள்ளட்டும்! ஜயிக்கப்பட்ட பிரான்ஸில் அவன் படும் தொல்லைக்குக் கணக்கில்லை! இதாலியிலோ, ஒரு சிநேக தேசத்தை பிடித்துக் கொள்ளுகிறான். ஆனால், செயலற்ற செல்வாக்கற்ற துரைத்தனமும், சகஜமான இறக்குமதிகள் முக்காலுக்குமேல் குறைந்தும், இதாலிய "கருப்பு அங்கிகளைக்" காட்டிலும் ஜாஸ்தியாக ஜெர்மானியரை வெருக்கும் அடக்கியாளப்பட்ட தேசத்தாருமுள்ள தேசம்!

## எதிரியின் முடிவு.

இப்பகுதியில் எங்கள் அபிப்பிராயங்களைத்தான் எழுதுவதென்ற வழக்கத்தை, அடியிற்கண்ட அருமையான குறிப்பை உத்தேசித்து மாற்றுகிறோம்.

மற்ற தேசத்தாரைக்காட்டிலும் அமெரிக்க பத்திரிகைகள் ஜெர்மனியிலிருந்தும் இதர ஆக்கிரமண தேசங்களிலிருந்தும் செய்திகள் பிரசுரிக்கிறார்கள்.

ஜெர்மன் அதிகாரிகள் உண்மை உள்ளபடி உலகத்தாருக்குத் தெரியக்கூடாதென்ற உத்தேசத்துடன் சில செய்திகளே வெளியில் போகாமல் கத்தரித்துவிடுவது உண்டு.

ஆயினும், அவர்களுக்கு போராத காலம், "நியூ-யார்க் டிரிப்யூன்" (Newyork Tribune) என்ற பத்திரிகையின் பாரிஸ் நிருபர், பின் வரும் செய்தியை கத்தரிப் பன்னியில் போடும்படி பார்த்துக்கொண்டார். அந்தச் செய்தியாவது :—"முழு மனதுடன் அமெரிக்கா உதவி புரிவதாகக் கிளம்பியது பெரிய துர் சொப்பனமாக இருக்கிறது. இதனுல் போரில் ஜெர்மனிக்குத் தோல்விதான் முடிவும், தேசத்தில் புரட்சியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஒவ்வொரு நாட்டிலும் கலகமும் ஏற்படும் என்ற நிச்சயத்தால் ஜெர்மானியர் பயப்படுகிருர்கள்......... ஜெர்மன் துருப்புகள் 'ஹோடல்' மூலேகளில் தங்களுக்குள் பேசிக்கொள்ளுவதை நான் கேட்கிறேன். .........தாங்கள் வீடுகளுக்குத் திரும்பும்படி யுத்தமானது வருகிற வெய்யிற் காலத்திற்குள் முடியவேணுமென்று சொல்லுகிருர்கள். அமெரிக்கா இதில் கலக்கக்கூடாதென்கிருர்கள் ; சென்ற யுத்தத்தில் அமெரிக்கா செய்த உதவியால் தான் யுத்தத்தின் போக்கே மாறியது என்று சொல்லுகிருர்கள் ; "கடவுளே ! மறு முறையும் அமெரிக்கா அப்படிச் செய்வார்களானுல் !" (என்று சொல்லி தலேயில் கைகளே வைத்துக் கொள்ளுகிருர்கள்).

---

# கிங்ஹால் பத்திரிகை கடிதம்.

## பிரான்ஸில் தற்போது சந்நிவேசங்கள்.

(பிரான்ஸின் நிலேமையைப்பற்றி கீழே விவரங்களேப்பிரசுரிக்கிருேம். ஆக்கிர மிக்கப்பட்ட பிரதேசங்கள் என்ன, ஆக்கிரமிக்கப்படாத பிரதேசங்கள் என்ன, இவைகளில் பல இடங்களிலிருந்து நமக்கு இந்தத்தகவல் கிடைத் திருக்கிறது. அது நம்பத்தகுந்தது என்றே நினேக்கிருேம்.)

## பிரான்ஸின் தலேவர்.

மார்ஷல் பிடேன் உறுதியில்லாத சுருட்டைத்தலேக் கிழவன் என்று சொன்ன ஜனங்கள் ரொம்பத்தப்பாகச் சொன்னுர்கள் என்று பாரிஸிலுள்ள பிரெஞ்சு-ஜெர்மன் வட்டாரங்கள் நினேக்கின்றன. இதற்கு மாருக, அந்த மார்ஷல் சற்று ஜம்பக்காரராயினும், மிக்க உறுதியுள்ளவர் ; அவரை ஒருவரும் ஏமாற்றமுடியாது. நாஸிகள் அவரை நாலுவகை உபாயங்களால்—சாம பேத தான தண்டங்களால்—அவரைத் தங்கள் வலேயில் சிக்கப்பார்த்தும் அவர் அசையவில்லே. இனித் திரும் பாத ஒரு பழைய உலகில் அவர் தன் கற்பனேயில் வசித்துவரலாம் ; ஆயினும் பிரெஞ்சு சரணடைந்தவுடன் ஏற்பட்ட சமாதான ஷரத்துக்களே அணுப் பிசகாமல் நிறைவேற்ற அவர் எவ்வளவு கஷ்டங்களேயும் எதிர்ப்பார். விஷி ஸர்க்காரிடமிருந்து நாஸிகள் தங்கள் வழக்கம்போல் சிறுமீனேப்போட்டு பெரிய

மீனைப்பிடிப்பது என்ற தந்திரத்தைக்கொண்டு, பழைய நிபந்தனைகளைக்கொண்டு புதிய நிபந்தனைகளை வாங்குவது, என்று முயன்றார்கள். அப்பொழுதுதான், தன் ரீதியாக மானம் கௌரவத்தில் மிக்க நம்பிக்கைகொண்ட ஒரு பிடிவாதக்கார மனிதனை (பிடேன்) எதிர்த்து ஜெர்மானியர்கள் முட்டிக்கொள்ள நேரிட்டது.

ஹிட்லர் பிரெஞ்சு கடற்படை என்ன, மத்தியதரைக்கடலில் பிரெஞ்சு கொத்தளங்கள் என்ன, அல்லது பிரிட்டனுக்கு எதிரிடையாக நாஸிப்போராட்டத்தில் பிரெஞ்சு எவ்விதத்திலேனும் கலந்துகொள்ளவேண்டும் என்று வற்புறுத்தினால், ஹிட்லரைத் தோற்கடிக்க மார்ஷல் பிடேன் ஒரு துருப்புச் சீட்டு கையில் வைத்துக் கொண்டிருக்கிறார் என்று பாரிஸிலும் விஷியிலும் உள்ள தெரிந்தவர்கள் நினைக்கிறார்கள்; அச்சீட்டு, ஜெனரல் வேகாண்ட் ஆபிரிக்காவில் இருப்பது. ஹிட்லர் மீறினால் அதை மார்ஷல் பிடேன் அடித்து ஜயிப்பார். விஷி ஸர்க்கார் ஆபிரிக்காவில் பிரெஞ்சு சைனியங்களைக் கலைக்காமல் ஒன்று திரட்டி வைத்திருப்பதையும், சாதாரணநாளைவிட பிரெஞ்சு காலனிகளில் துருப்புகளை ஜெனரல் வேகாண்ட் ஒத்திகை பார்த்த படாடோபத்தையும் பற்றி நாஸிப்பத்திரிகைகள் படபடவென்று கோபித்தெழுதியதை வாசித்து எல்லா பிரெஞ்சுக்காரரும் சந்தோஷப்பட்டனர்.

## பிரெஞ்சு பொதுஜனம்.

நமக்குத் தகவல் கொடுக்கிறவர்கள் ஒரு விஷயத்தை ஏகோபித்துச்சொல்லுகிறார்கள் :—பிரெஞ்சுக்காரர்களுக்கு யுத்தத்தைக் கண்டாலே கண்டாளித்துவிட்டது. இனிமேல் போராட்டத்தில் சேரக்கூடாதென்று தற்பொழுது நினைக்கிறார்கள். பிரெஞ்சு ஜனங்கள் எவ்வளவு மனம் ஒடிந்து உற்சாகம் குன்றி இருக்கிறார்கள் என்று பிறரால் நினைத்துப்பார்க்கக்கூடமுடியாது. அவர்களுக்கு தைரியம் திரும்ப ரொம்பக்காலம் பிடிக்கும். அதுவரை அவர்கள் எவ்வளவு அவமானங்களையும் பொருக்கத்தயார்.

பிரெஞ்சுக்காரர் தங்களுக்கு மிஞ்சியிருக்கும் பெருமையும் பலமும் பிரெஞ்சு காலனிகள்தான் என்று எண்ணுகிறார்கள். ஆனால், அவைகளுக்கு நாஸிகளிடமிருந்தோ பாஸிஸ்ட்களிடமிருந்தோ அபாயம் ஏற்பட்டால் அவைகள் தன் கையே தனக்குத்துணை என்று இருக்கவேண்டியதுதான். ஒருக்கால் பிரெஞ்சு கடற்படை உதவிக்கு அனுப்பப்படலாம். இதற்கு ஜாஸ்தியாக பிரெஞ்சு ஜனங்கள் ஒருவித ஒத்தாசையும் செய்யமுடியாது, செய்யவும் மாட்டார்கள்.

## இதாலியர்களைப்பற்றி மனப்பான்மை.

இதாலியர்கள்பேரில் பிரிடிஷார் லிபியாவில் அடைந்திருக்கும் வெற்றிகளைக் கண்டு பிரெஞ்சுக்காரருக்குக் குதூகலம். ஏனெனில் (1) இதாலியர்களைக்கண்டால் பிரெஞ்சுக்கு இழிவு. சென்ற ஜூனில் தங்களுக்கு இதாலியர் துரோகம் செய்து கீழே விழுந்தவனை முதுகில் குத்தியது முதல் கோபம் வேறு. ஆனதால், இதாலியரை யார் குமிய வைத்தாலும் அவர்களுக்குக் குதூகலம். (2) வட ஆபிரிக்காவில் இதாலியப்படைகளின் தோல்வியால் பிரெஞ்சு ட்யூனீஷியா

அல்ஜீரியாவுக்குத் தற்போதைய ஆபத்து விலகியது. லிபியப்படைகளைப் பிரிடிஷ் படைகள் எதிர்த்தமுதல் பிரெஞ்சு ஸிரியா, ஜிபூதி பிரதேசங்களிலுள்ள பிரெஞ்சுக்காரர் அங்குள்ள இதாலியருக்கு விரோதமாக ஆரவாரங்கள் செய்வதைத்தடுப்பது விஷி ஸர்க்காருக்குப் பிரயாசையாகிவிட்டது. ஆரவாரங்கள் நடந்திருந்தால் பிரான்ஸுக்கும் அச்சுக்கூட்டாளிகளுக்கும் தற்போதிருக்கும் உறவில் இவை விகாரமாகத்தோற்றும்.

## பிரிடிஷாரைப்பற்றி மனப்பான்மை.

ஜூன் மாதத்தில் பிரான்ஸ் விழுந்தமுதல் பிரிடனைக் குறித்து பிரெஞ்சு மனப்பான்மை மிகவும் மாறியிருக்கிறது. இங்கிலாந்து தோல்வியடைய வேண்டியதுதான், சீக்கிரத்தில் தோற்றும் விடும் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். இது நடைபெறாதபொழுது அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. சில இடங்களில்—என்ன பிரான்ஸ் மண்ணைக்கவ்வுவது, இங்கிலாந்து தப்புவதா?—என்ற பொறாமைகூட இருந்தது. ஆனால், நாஸிகளின் ஆகாயத்தாக்குதல்கள் ஆர். ஏ. எப்.-ஆல் சமாளிக்கப்பட்டு, இங்கிலாந்தைப் படையெடுக்கச் செய்த பிரமாதமான ஏற்பாடுகள் வீணானவுடன் பிரான்ஸில் வேறுவிதமான எண்ணங்கள் உதிக்கலாயின. அதுமுதல் பிரிடிஷாரிடம் நேசப்பான்மையும் திரும்பிவளர ஆரம்பிக்கிறது, முக்கியமாக வடபிரான்ஸில் பிரான்ஸை புனருத்தாரணம் செய்யக்கூடிய பிரிடிஷாருக்கு வெற்றிகிடைத்தால் தேவலை என்று பிரெஞ்சுக்காரரில் அநேகர் பிரார்த்திக்க ஆரம்பித்தனர். ஆனால், இது மட்டில் விரும்புவது ஒன்று; பிரிடிஷாருடன் மறுபடியும் சேர்ந்து போர் புரிவது மற்றொன்று.

## பொருளாதார நிலைமை.

ஆக்கிரமிக்கப்பட்ட பிரான்ஸின் பொருளாதார நிலைமை பல இடங்களில் பலவிதமாக இருக்கிறது. வேலையில்லாத்திண்டாட்டம் ரொம்பத்தானிருக்கிறது. ஆயினும், நாஸிகளுக்கு வேண்டிய தொழிற்சாலைகள், பெரும்பான்மை நாஸிகளின் மேன்பார்வையில், மறுபடியும் வேலை துவக்குகின்றன; ஒரு வருஷத்துக்கு முன்பை காட்டிலும் ஜாஸ்தி சாமான்களும் உற்பத்தி செய்கின்றன. ஜெர்மனிக்காக சாமான்களைச்செய்யும் ரீனால்ட், ஸிட்ரோயென் தொழிற்சாலைகளில் 25 சதவீதம் சம்பள உயர்வு ஏற்பட்டிருக்கிறது. மற்ற இடங்களைக் காட்டிலும் இவ்விடங்களில் தொழிற்சாலைகள் ஜெர்மானியர் கைக்குள் விழக்கூடாதென்று தொழிற்சாலைகளை ஜனங்கள் வேணுமென்று அழிக்கவில்லை.

## நைச்சியம்.

ஜெர்மானியர்கள் பாரிஸில் நுழைந்ததும் பாரிஸ்காரர்கள் கொடுங்கோன்மையை எதிர்பார்த்தார்கள். ஜெர்மன் துருப்புகள் ஒழுங்காக நடந்ததைக் கண்டு ஆச்சர்யம் அடைந்தார்கள். ஆரம்பத்தில் தலைநகரில் இருந்த துருப்புகள்—பெரும்பான்மை ஆஸ்ட்ரியர்கள்—பாரிஸ்காரர்களுடன் சிநேகப்பான்மையில் உறவாடினார்கள். இவர்கள் அவ்வளவு கெடுதல் இல்லை என்று பிரெஞ்சு

சொல்லிக்கொண்டார்கள். இலையுதிர்காலம் செல்லச்செல்ல ஜெர்மனியின் இதர பிரதேசங்களிலிருந்து துருப்புகள் வந்தார்கள்; அவர்களுக்கும் பாரிஸ் காரர்களுக்கும் அவ்வளவு பிடித்தமாயில்லை.

பத்திரிகைகள், அச்சிட்ட முதல் இரண்டு தினங்களுக்குள், ஆக்கிரமிப்பு பிரான்ஸிலுள்ள ஜெர்மன் துருப்புகளுக்கு மிக்க கவனத்துடன் வழங்கப்பட்டன. தன் தன் நகரம் அல்லது ஜில்லாப்பத்திரிகையை ஒவ்வொரு ஜெர்மன் சிப்பாயிக்கு வழங்குவதிலும் மிக்க கவனம் செலுத்தப்பட்டது. இவைகளில் துருப்புகளின் உற்சாகத்தை நிலை நிறுத்தக் கூடிய ஜாக்கிரதையாக தேர்ந்தெடுக் கப்பட்ட பிரசாரம் இருக்கும். பிரசாரத்தின் விஷயம் இது:—ஜெர்மனியில் எல்லாம் நன்ருக நடைபெறுகிறது; யுத்தம் முடிந்து ஜயம் வந்தவுடன் சமூக சீர்திருத்தங்கள் ஏற்படும்; பிறகு ஒவ்வொரு ஜெர்மனுக்கும் ஒரு 'ஜனங்களின் மோட்டார்காரும்' சமுத்திரக்கரைக்கு ஓய்வு எடுத்துக்கொண்டு செல்ல விடுமுறை நாட்களும் கிடைக்கும். பிரான்ஸில் ஜெர்மன் சிப்பாயியைப்பற்றி அபிப்பிராயம் இது:— இன்றைய ஜெர்மன் சிப்பாயி நாஸித் தலைவர்கள் இழுத்த இழுவைக் கெல்லாம் ஒப்பி வளையக்கூடிய ஒரு உபயோகமுள்ள கருவி; ஆனல், அக்கட்சி யில் அவன் சேர்ந்தவன் அல்ல. பழைய பிரெஞ்சு பொதுவுடைமைக்காரர்கள்— அவர்களுள் அநேகர் யூதர்கள்கூட—ஜெர்மன் சிப்பாய்களால் நிறுத்தி பரி சோதிக்கப்பட்டனர். அவர்களிடம் பிரெஞ்சு தொழிற் சமூகத்தைச் சேர்ந்த தஸ்தாவேஜிகள் அகப்பட்டன. இருந்தபோதிலும், அவைகளை பறிமுதல் செய்து அவர்கள் மீது நடவடிக்கை நடத்தாமல் சிப்பாய்கள் அவர்களுக்கு சுருட்டுகளும் பணமும் அநேக பிரமேயங்களில் கொடுத்திருக்கிருர்கள். தங்கள் லாரிகளில் ஏற்றிச்சென்றும் இருக்கிருர்கள். அநேக தடவை 'உஷார்! ரகசியப் போலீஸும் கெஸ்டாபோவும் வருவார்கள். அவர்கள் வருமுன் வெளியேறு' என்று எச்சரிக்கப்பட்டிருக்கிருர்கள்.

எங்கெங்கு மீண்டும் தொழில் உற்பத்தி தேவையோ அந்தப் பிரதேசங்களில் எல்லாம் ஜனங்களின் மனதைக் குளிரச்செய்வதில் ஆக்கிரமிக்கும் ஜெர்மானியர் கள், பெரும் முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிருர்கள். உதாரணமாக நாண்டிஸில் ஜெர்மானியர்கள் பழங்களும் சாக்லெட்டும் கொண்டுவந்து நகர வாசிகளுக்குப் பங்கிட்டனர். பாயிடேர்ஸில் வெண்ணெய் ஜனங்களுக்கு கிடைக் காதபோது தாங்களே வெண்ணெய் தருவித்துப் பங்கிட்டனர்; பிரிடனின் சில பாகங்களில் பிரிடிஷார் விட்டுப்போன சாமான்களிலிருந்து சுருட்டுகளும் ஜாமும் கொடுத்தனர்.

## பொதுவுடைமை.

பிரெஞ்சு தொழிற் சங்கத்தில் உத்தியோகம் வகிப்பவர்கள் வேறு தேசங் களுக்கு ஓடியதை ஜெர்மானியர்கள் தங்கள் பிரசாரத்துக்கு அனுகூலப்படுத்திக் கொண்டனர். அவர்களில் அநேகர் மறைந்ததை 'இங்கிலாந்துக்கு ஓடுகையில்'

பிடிபட்டு சிறை செய்யப்பட்டதாகக் கட்டிவிட்டனர். பிரெஞ்சு தொழிலாளிகளிடையே பிரசாரம் இது—உங்கள் பொதுவுடமை வாய்மட்டும்; எங்கள் 'ஜனப் பொதுவுடமை' (National Socialism) காரியாம்சத்தில் பொதுவுடமை, என்பது. ஆக்கிரமிக்கப்பட்ட பிரான்ஸ் பாகங்களில் இம்மாதிரி பிரசாரம் வீண் போகவில்லை.

சரத்காலம் செல்லச்செல்ல பொதுவுடமைக்காரர்களின் சுறுசுறுப்பும் அதிகரித்தது. ஆயினும், பிரெஞ்சுத் தொழிலாளிகளைக் குறித்து அவர்களுடைய கொள்கை என்னவென்பதை நிர்த்தாரணம் செய்வது சற்று சிரமசாத்தியமாகவே இருக்கிறது. சிற்சில சமயங்களில் பொதுவுடமைக்காரர்கள் நாஸிகளுடன் ஒத்துழைப்பைக் கோருவதைப்போல் தோற்றினர்; ஆனாலும், மொத்தமாக நாஸிகளுக்கு விரோதமான மனப்பான்மைகளை ஜனங்களிடையே தூண்டி, ஆக்கிரமிப்பு பிரான்ஸிலுள்ள தொழிற் சாலைகளிலிருந்து ஜெர்மனி பெறும் சாமான்களின் உற்பத்தியைத் தடை செய்வதே அவர்கள் போக்காகத் தோற்றுகிறது.

### விஷி சர்க்காருக்கு இடையூறுகள்.

விஷி சர்க்காருக்கு எல்லா விதங்களில் ஜெர்மானியர்கள் இடையூறுகளை உண்டு பண்ணி வருகின்றனர்; பிடேனுக்கும் அவர் மந்திரி சபைக்கும் முன் எழுந்த பெரும் பிரச்னைகளை தங்களுக்குப் பயன் படும்படி செய்துகொண்டு இருக்கிறார்கள். ஒரு உதாரணம், பாரிஸில் சாராயமில்லை; அநேக ரயில் வண்டிகளில் அதை பாரிஸுக்கு அனுப்புவதைப்பற்றி அனுமதி கொடுக்கவேணுமாய் வாரக்கணக்காய் பேரம் பேசப்படுகிறது. இதில் காலஹரணம் செய்வது நாஸிகள். ஆனால், விஷி சர்க்கார் ராஜாங்கம் நடத்தத் தெரியாமல் மழமழப்பாய் இருப்பதால்தான் காலஹரணம் ஏற்பட்டது என்று நாஸிகள் பிரசாரம் செய்தனர்.

---

## பிரிடிஷ் விமானங்கள் ஜெர்மனிக்குள்போய் தாக்குகின்றன.
## நமது ஆகாய எல்லை விசாலப்பட்டுவிட்டது.
## இது நமது விமானப்படையின் வளர்ச்சியைக் காண்பிக்கிறது.
## இவ்விதமாக விமானங்களைக்கொண்டே ஜெர்மனிமேல் படையெடுக்கப் போகிறோம்.
## இதற்காக நீடித்த திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன.

(டெய்லி-டெலிகிராப் பத்திரிகையின் ஆகாய-நிருபர் எழுதுவது)

ஆகாயத்தில் சஞ்சரிக்கும் நமது எல்லை விசாலப்பட்டு இப்பொழுது நமது விமானங்கள் ஜெர்மனிக்குள்போய் தாக்குகின்றன. இரவும், பகலும் ஓயாமல் எதிர்த்து ஜெர்மனிக்குள் முன்னேற முடியும். இதுவே பிரிடன் யோசித்திருக்கும் படையெடுப்பு.

சென்ற ஆகஸ்ட், ஸெப்டம்பர் மாதங்களில், எதிரியைவிட பிரிடனுக்கு விமானங்கள் குறைவாயிருந்ததால் எதிரி இங்கிலாந்தைத் தாக்கவும், பிரிடன் தடுத்துக்கொள்ளமட்டும் நேரிட்டது. ஏதோ சில பிரிடிஷ் விமானங்கள் இரவு வேளையில்மட்டும் எதிரி தேசத்துக்குள் சென்று எதிர்த்தன.

இப்பொழுது இதெல்லாம் மாறிவிட்டது. கேவலம் லண்டனையும், பிரிடனுடைய தென்கிழக்குப் பாகத்தையும் பாதுகாப்பதிலிருந்து, இப்பொழுது பிரிடிஷ் விமானங்கள் பிரஞ்சுக் கடற்கரையையும், ஜெர்மனியையும் எதிர்க்கின்றன.

பிரிடிஷ் விமானப்படை பலப்பட்டு வருவதற்கு இதுவே ஒரு நிச்சந்தேக மான அத்தாக்ஷியாகும்.

1914-18 மகா யுத்தத்திலும் இம்மாதிரியாக, பாதுகாப்பதிலிருந்து எதிர்க்க ஆரம்பித்து, அதன் பயனாக, பிரிடிஷ் விமானங்கள் எதிரி தேசத்துக்குள் நுழைந்து, எதிரி விமானங்களை வீழ்த்தின. அதனால், எதிரியின் விமானங்கள் நேயர்கள் எல்லைக்குள் வரவே முடியவில்லை.

சென்ற ஆகஸ்ட், ஸெப்டம்பர் மாதங்களில் பிரிடன்மேல் பறந்து வந்த ஜெர்மன் விமானங்கள் நூற்றுக்கணக்காகச் சுட்டுத்தள்ளப்பட்டன. பிரிடனுடைய சாமர்த்தியம்தான் இதற்குக் காரணம். ஆனால், போதுமான விமானங்கள் கையிலில்லாததால் எதிரி பிரிடனுக்குள் பிரவேசிக்கவும், அதைத் தடுத்து மட்டும் நிற்கவும் நேரிட்டது. இனி ஜெர்மனிக்குள் நாம் படையெடுத்து ஜெர்மன் விமானங்கள் ஜெர்மனியிலேயே சுட்டுத்தள்ளப்படும்.

நம்முடைய விமானங்களிலிருக்கும் யந்திரங்கள் ஜெர்மனியைக் காட்டிலும் உயர்ந்தவை. வெகுவிரைவில் நமக்கு விமானங்களுடைய சங்கியையும் அதிகப் பட்டுவிடும். இப்பொழுதுகூட, கையிருப்பில் பல விமானங்கள் இருக்கின்றன.

படையெடுத்துப்போகும் விமானங்கள் அதிகமாக நஷ்டமாகும். ஆனால், இதனால் ஜெர்மானியர் செய்து வரும் யுத்த முயற்சியெல்லாம் நாசமடையும்.

சென்ற வருஷம் ஜெர்மானியர் முதலில் பிரிடனை எதிர்த்துப் பிறகு பின் வாங்கியதுபோல், நாம் பின் வாங்கமாட்டோம். ஆரம்பித்துவிட்டால் நிற்க மாட்டோம். மேன்மேலும் முன்னேறுவோம். ஏதோ மழை பனியால் மட்டும் சில தினங்களில் நிற்கலாம்.

நாம் முன் செல்லும்போது, எதிரியின் விமானங்கள் எதிர்க்கத்தான் செய்யும். ஆனால், தரைச்சண்டையில் ஒவ்வொரு ஊராய்ப் பிடித்துக்கொண்டு போவதுபோல நாம் ஆகாயத்திலும் முன்னேறுவோம்.

இந்த மகத்தான விமானப் படையெடுப்பை வெகு விரைவில் சுலபமாகச் செய்து முடிக்க விமானப் படைத்தலைவர் ஸர் சார்ள்ஸ் போர்டல் வேண்டிய யுக்திகளைச் செய்துகொண்டிருக்கிறார்.

நாம் இடைவிடாது பலமாகப் படையெடுத்துச் செல்லும்போது எதிரிகள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளத் தங்கள் ஊரிலேயே தங்கிவிடுவார்களே ஒழிய பிறகு பிரிடன் வழி வரமாட்டார்கள்.

# இந்தியப் போர்வீரர்களுக்கும் மாலுமிகளுக்கும் வசதிகள்.

# இந்தியா வீட்டு நிதியின் வேலை.

## டன்கர்க்குக்குப்பிறகு எப்படி மனிதர்கள் ஒத்தாசை செய்யப் பட்டார்கள்.

(இவைகளைப்பற்றி கிளைவ் ராட்டிக்கன் எழுதுவதாவது).

இந்தியப் போர்வீரர்களுக்காகவும், மாலுமிகளுக்காகவும் இந்தியா வீடு வசதிகள் நிதியின் வேலையைப்பற்றி ஒரு பெரிய மானிட சரித்திரம் சொல்லப்படவேண்டும்.

பிரிடிஷ் ஆஸ்பத்திரிகளில் காயப்பட்டோ அல்லது சீக்காகவோ இருக்கும் இந்தியப் போர்வீரர்கள், மாலுமிகள் இவர்களுக்கு தங்கள் தேச மக்கள்கள் ஆண், பெண் என்ன, இங்கிலீஷ்காரர்களென்ன இவர்கள் தங்களை வந்துபார்ப்பதும், தங்களுடன் தங்கள் பாஷையிலேயே பேசச்செய்வதும், தங்கள் ஊரிலுள்ள பந்துக்களுக்கு தங்களுக்காக இவர்கள் கடிதங்கள் எழுதச் செய்வதும், இந்தியாவின் நிகழ்ச்சிகளைப்பற்றி தங்களுக்கு சமாசாரங்கள் கொண்டுவருவதும், தங்களுக்கு வேண்டிய அளவு சிகரெட்டுகளும், மற்றும் இதர "சௌகரியங்களும்" அளிப்பதினால், இவர்கள் இதை எவ்வளவு மதிப்பார்கள் என்று எண்ணிப் பாருங்கள்.

இவர்களை வைக்கப்பட்டிருக்கும் ஆஸ்பத்திரிகளில்—அதாவது கிரீன் விச்சிலுள்ள ஆஸ்பத்திரி, கில்ட்போர்ட்டிலுள்ள ஆஸ்பத்திரி, ஹோர் பீல்டிலுள்ள ஆரோக்கிய ஸ்தலம், அட்சின்ஸன் மார்லிரோக முக்தக்கிருஹம்--இவர்கள் நன்றாக கவனிக்கப்பட்டு வருகிறார்கள்; ஆனால் இந்தியா வீட்டுநிதியால் மேற்படி வைத்திய சாலைகளை பார்வையிடப்படும் உபாயத்தினால் இவர்களுக்கு வீட்டு வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்நிதியின் ஒத்தாசையில்லாவிட்டால் இந்த சௌகரியம் ஏற்படுத்த முடியாது.

## இந்திய மாலுமிகளுக்கு உதவி.

ஜெர்மானியரால் சிறையிலிருந்து விடப்பட்ட இந்திய மாலுமிகளைப் பற்றியோ அல்லது எதிரிகளின் செய்கையால் மூழ்கடிக்கப்பட்ட கப்பல்களில் இருந்த இந்திய மாலுமிகளைப்பற்றியோ கவனிப்போம். இவர்கள் தங்கள் சொந்த ஆஸ்த்திகளை இழந்தவர்கள். இந்த நிதியின் பொருளுதவியால் இம் மாலுமிகளுக்கு சகல ஆடைகளும்—உள் சட்டை, மேல் சட்டை, அங்கவஸ்திரம், கால் உறை, போர்வை முதலியன—அளிக்கப்படுகின்றன.

மிகவும் சிரமஸ்திதியிலிருப்பவர்களுக்குமாத்திரம் இந்நிதி உபயோகப் படுத்தப்பட்டுவரவில்லை. இந்நிதியை பரிபாலிப்பவர்களின் முக்கிய பிரயாசை இதனால் பிரிடிஷ் வியாபாரக் கப்பல்களிலுள்ள எல்லா இந்திய மாலுமிகளுக்கும் உதவிபுரியவேண்டுமென்பதுதான். இது ஒரு பெரிய காரியம் என்பது, ஒவ்வொரு வருஷமும் பிரிடிஷ் துறைமுகங்களில் நாற்பது ஆயிரத்திற்குமேற்கொண்ட இந்திய மாலுமிகள் வந்து இறங்குகிறார்களென்பதிலிருந்து, தெரியவருகிறது.

இந்தியா வீடுநிதி நிர்வாகிகள், கப்பல் வியாபார சௌகரிய சேவாவின் ஒத்தாசையோடு அதன்மூலம் வாராவாரம் கப்பல் மாலுமிகளுக்கு பிரித்துக்கொடுக்க காலுரை, ஷர்ட், அங்கவஸ்திரங்கள், பனியன், கை உரை முதலியன அடங்கிய மூட்டைகள் அனுப்புகிறுர்கள்.

## கப்பல்தலைவனின் கடிதம்.

உதாரணமாக இந்த நிதியினல் அளிக்கப்படும் சௌகரியங்களை போற்றப் படுவதைக்காட்ட, நாம் இந்த நிதியின் காரியதரிசியால் பெறப்பெற்ற அநேக வந்தனேபசார கடிதங்களில் ஒன்றை இப்பொழுது படிப்போம். இந்தக் கடிதம் "ஸிடி ஆப் க்ரைட்ச்ர்ச்" என்ற கப்பலின் தலைவரால் எழுதப்பட்டது. அது பின்வருமாறு :—

"இன்று காலை தங்களிடமிருந்து மிகுந்த நேர்த்தியானதும், ஆவலுடன் எதிர்பார்த்திருந்த பரிசு மூட்டைகள் எங்கள் கப்பலுக்கு வந்துசேர்ந்தன. அவைகளுக்காக தங்களுக்கு நான் எப்படி சரியானபடி என் வந்தனத்தை செலுத்துகிறதென்று தெரியவில்லை. இந்திய மாலுமிகளுக்கு இந்தக் கம்பளிகளை அளித்ததை நான் அப்பொழுது பார்த்துக்கொண்டிருந்தேன். இந்தக்கம்பளிகளை நெய்த பெண்மணிகள் இந்த மாலுமிகளின் முகங்களை இப்பொழுது பாரக்கக்கூடுமாளுல் அவர்கள் தங்கள் சிரமத்திற்கு தகுந்த பிரயோஜனமேற்பட்டதென்று திருப்தி அடைந்திருப்பார்கள். தலைமை வேலைக்காரர்கள் மிகவும் ஜாக்கிரதையோடு 'எவ்வளவு பணம்' என்று கேட்டபோது, நான் 'ஒன்றுமில்லை' என்று பதிலளித்தவுடன் அவர்கள் முகங்கள் அப்படியே மலர்ந்து பிரகாசித்தன. தாங்கள் தயவுசெய்து தங்களோடுகூட வேலைசெய்யும் ஒவ்வொருவருக்கும், நாங்கள் இந்த நேர்த்தியான பரிசுகளை எவ்வளவு போற்றுகிறேமென்பதை தெரிவியுங்கள். எங்கள் மாலுமிகளும் உங்கள் எல்லோருக்கும் அவர்கள் வந்தனத்தை தெரிவிக்கும்படி என்னைக் கேட்டுக்கொள்ளுகிறுர்கள்."

இது ஒரு கப்பற்தலைவனிடமிருந்து கிடைத்த கடிதத்தின் ஒரு பகுதி.

"என் கப்பலிலுள்ள ஒரு பெருத்த வேலைக்காரர்கள் கூட்டத்திற்குத் தாங்கள் துரிதமாக அவர்களின் சௌகரியத்துக்குறிய சாமான்களை அனுப்ப ஏற்பாடு செய்ததை நான் மிகவும் பாராட்டுகிறேன். நான் அநேகம் பேர்களைக் குறிப்பிட்டபோது, ஒரு சிலர்களுக்குமாத்திரம் மேற்படி வசதிகள் கிடைத்தால் அதுவே ஒருபெரிய அதிர்ஷ்டம் என்று நினைத்தேன். மருநாள் காலையில் கப்பலிலுள்ள அவ்வளவு மனிதர்களுக்கும் பிரயாணத்திற்குவேண்டிய வசதிகள் பூராவும் அளிக்கப்படுமென்று நான் எண்ணவேயில்லை. தங்களை அவ்வளவு மேன்மையாக கவனிப்பதில் அவர்களுக்கு இருக்கும் ஆச்சரியமான சந்தோஷத்தை சொல்லிக்கொள்ளத்தெரியாமல் அவர்கள் குழந்தைகள் மாதிரியிருக்கிறுர்கள். எனக்கும், என்னுடன் மற்ற உத்தியோகஸ்தர்களுக்கும் இந்தக்கப்பல் பிரயாணத்தில் சந்தோஷமும், இச்சையுமுள்ள மாலுமிகளிருக்கிறுர்கள் என்ற உணர்வு ஏற்படுகிறது."

## பட்டாளத்தின் தேவைகள்.

இந்திய துருப்புகள் சம்மந்தப்பட்டவரையில் அவர்களும் இதுவரை போற்றத் தகுந்த அரிய சேவை செய்திருக்கிருர்கள். "இங்கிலாந்தில் எங்கேயோ ஓர் இடத்தில்" இருக்கிற இந்தியன் பயனீர் படைக்கு இந்த இந்தியாவீடு நிதி விளையாட்டு வசதிகளையும் சமாசாரப் பத்திரிகைகளையும், கிராமபோன் பெட்டி களையும், சிகரெட்டுகளையும் அளிக்க ஏற்பாடு செய்திருக்கிறது.

இந்த பட்டாளத்தின் தேவைகள், பிரான்ஸில் வேலைதுவக்கி அங்கே தங்களுடைய முஸ்திப்புகளில் பெரும்பான்மையை இழந்த இந்தியன் மியூல் டிரான்ஸ்போர்ட் கண்டிந்சண்டின் அவசியங்களைவிட, மிகவும் குறைந்தது. பின்னே சொன்ன கம்பெனியார்கள் பிரான்ஸில் முதல் முதல் இறங்கினபோது மிகவும் கடுமையான சீதோஷ்ணஸ்திதியை அனுபவிக்கநேர்ந்தது. இதை நிவர்த் திக்க இந்திய வசதி நிதி இவர்களுக்கு ஏராளமான அங்கவஸ்திரங்களும், தலை குட்டைகளும், தலைச்சீராக்களும், கை உரைகளும், கால் உரைகளும், கூடார வசதிகளும் அனுப்புவித்தது. பிறகு இவர்களுக்கு க்ஷவரக்கத்திகளும், சோப் களும், துண்டுகளும், விளையாட்டுக்கருவிகளும், பத்திரிகைகளும், கிராமபோன் பெட்டிகளும், கிராமபோன் பிளேட்களும், சிகரெட்டுகளும் அனுப்பப்பட்டன. டன்கர்க்குக்குப்பிறகு இவர்களால் இழக்கப்பட்ட தங்களுடைய சொந்த சாமான் களையும், முஸ்திப்புகளையும் திரும்ப அடைய இந்த நிதி அவர்களுக்கு ஒத்தாசை செய்தது. இந்த பட்டாளத்தின் பேரில் காட்டப்படும் சிரத்தை இன்னமும் நடந்து வருகிறது.

இந்நிதி 1939-ம் ஆண்டின் கடாசியில் ஏற்படுத்தப்பட்டது. இந்தியா ஹை கமிஷனர், ஸர்பிரோஸ்கான்நூனின் பிரேரேபணையால் டௌவேஜர் வைகவுன்டஸ் செம்ஸ்போர்டு தலைமையின்கீழ் ஒரு ஆலோசனை சபையும், ஒரு காரிய நிர்வாகசபையும் ஏற்படுத்தப்பட்டது. இந்த இரண்டு சபைகளிலும் இங்கிலாந்தில் வசிக்கும் பிரபல இந்தியர்கள் அங்கத்தினர்களாகயிருக்கிருர்கள். இதற்கு கௌரவ பொக்கிஷதார் மிஸ்டர் சார்லஸ் வாடிங்டன். இதன் காரியதரிசி லேடி செம்ஸ்போர்டின் மகளான ஹான்ரபிள் மிஸஸ் ஜான் மாங்க்.

இந்நிதியானது வைஸ்ராய் யுத்தநிதி சகாயத்தையும் சில பிரத்தியேகமான சொந்தக்கொடையையும் ஆசிரயித்ததாகயிருக்கிறது. இந்தியாவில் அக்கரை உள்ள சில ஆங்கில கூட்டு வியாபாரிகளிடமிருந்தும், இங்கிலர்ந்திலுள்ள சில இந்திய வர்த்தகக்கூட்டத்தாரிடமிருந்தும் ஔதாரியமுள்ள ஒத்தாசை அடைந்து இருக்கிறது இதுவரை கிடைத்திருக்கிற தொகை மிகவும் அதிகமானதல்ல; ஒரு சொல்ப ஆயிரம் பவுன்களேயாகும். ஆனல் இவைகளை பரிபாலிக்கும் செலவு மட்டுக்கட்டப்பட்டு, இவைகளை கூடியவரையில் சரியானபடி உபயோகப் படுத்தப்பட்டிருக்கிறது. சில பிரத்தியேக மனிதர்களிடமிருந்தும், சில சங்கங் களிலிருந்தும் வருகிற கொடைகளைத்தவிர இந்த இந்தியா வீடு நிர்வாக சபையார் கள், இங்கிலாந்திலும் இந்தியாவிலும் சில சேவை செய்யும் சங்கத்தால் ஒத்தாசை செய்யப்படுகிருர்கள். இந்த இந்தியா வீட்டில் ஒரு சேவா சங்கத்தைச்சேர்ந்த இந்தியப் பெண்மணிகள் ஒவ்வொரு வாரமும் கூடுகிருர்கள்.

# இதாலிக்குள் ஜெர்மனி புகுந்ததின் அர்த்தம்.

# கிரேக்க எதிர்ப்பை வேறு பக்கம் திருப்ப முயர்ச்சி.

# நாஸி, பாஸிஸ்ட் பத்திரிகைகளுக்குள்ள வித்தியாசம்.

டெயிலி டெலிக்ராபின் ராஜ தந்திர நிருபர் எழுதுகிருர்.

ஜெர்மனியின் விமானப்படையின் சில பிரிவுகள் இதாலிக்குள் வந்ததற்கு இரண்டு காரணங்கள் உள. பாஸிஸ்ட் இதாலியை யாராவது ஒரு வல்லரசு தோற்கடித்தால் அதன் கதி அதோகதியாகி விடுமென்று, ஜெர்மன் ரீஷ்ஸ்டாக்கில் சென்ற வருஷம் ஹிட்லர் கூறிய ஒரு வார்த்தையை ஞாபகத்துக்குக் கொண்டு வருகிறது. முஸோலினிக்கு ஏற்பட்ட அபஜயத்திஞல் இதாலி நாசமடைந்து விடக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இது ஸம்பவிக்கக்கூடாது என்று பல காரணங்களைக் கொண்டு ஹிட்லர் தீர்மானம் செய்திருக்கிறுன் போலும். மத்தியதரைக்கடல் பிரதேசத்தில் தனக்கு விசாலமாய் ஏற்படுத்தக்கூடிய நிலையங்களுக்காக அநேக பாகங்களை எடுத்துக் கொள்ளலாமென்ற எண்ணத்துடன் ஹிட்லர் இதாலியைக் காப்பாற்று வதாகத் தீர்மானித்து இருக்கிருன்.

சில வாரங்களுக்கு முன், இதாலியின் தென்பாகத்தில் பாக்கியா என்ற இடத்தில் ஜெர்மானிய ராணுவப்படைகளில் அநேகர் இருப்பதாக நான் தெரிவித் திருந்தேன். அந்தச்சமயம் வந்தவர்கள் பெரும்பாலும் யந்திர சாஸ்திரம் தெரிந்தவர்களும் சில முக்கியமானவர்களும்தான் என்று அநேகமாய்ச் சொல்லலாம். அவர்களின் பலத்தைக்கொண்டு இன்னும் அநேகரை அங்கு கொண்டுவரக்கூடும்.

ஜெர்மனியிலிருந்து முக்கியமான ராணுவப்படையானது இப்பொழுது இதாலிக்கு அனுப்பப்பட்டிருக்கிறதென்று சந்தேகமன்னியில் தெரிய வருகிறது. நம்பக்கூடிய சில நிருபர்கள் ஏராளமான ஜெர்மன் அணிகள் ப்ரென்னர் மார்க்க மாகச் சென்றிருக்கிருர்களென்று வெளியிடுகிருர்கள்.

லிபியாவில் நடக்கும் பிரிடிஷாரின் எதிர்ப்பையும் கிரீஸுக்குத் துணைக் கப்பல்கள் உதவியால் பிரிடிஷார் உதவி செய்வதையும் தடுக்க உத்தேசித்து ஸிஸிலித்தீவில் ஜெர்மனி விமான நிலையங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

## பால்கன் நாடுகளின் கவனத்தை மாற்ற உத்தேசம்.

இதே சமயத்தில் ருமேனியாவிலிருக்கும் ஜெர்மானியர்களை, பால்கன் நாடுகளையாவது அல்லது ருஷ்யாவையாவது அதிகமாக வெருட்டுவதற்காகவோ, அல்லது மாஸிடோனியாவிலும், திரேஸிலும் கடற்கரையிலுள்ள முக்கியமான ஸ்தானங்களை ஆக்கிரமிக்க வேகமாகச் செல்லக்கூடிய ஒரு பெரும் படையை உபயோகப்படுத்த அவர்கள் உத்தேசிக்கிருர்கள்.

இந்தப்புதிய அபாயத்தை நிவர்த்திக்க அல்பேனியன் போர் முனையிலிருந்து துருப்புகளின் பெரும் பகுதியை வேறு இடத்திற்கு அனுப்பவேண்டியதாக கிரீஸுக்கு நேருமென்று ஹிட்லர் புள்ளி போடுகிறான். இம்மாதிரியான ஜெர்மனியின் ஆக்கிரமணம் பல்கேரியாவழியாகவும், யுகோஸ்லாவியா வழியாகவும் சென்றுதான் கைகூடக்கூடும். தற்கால சின்னங்களைக் கவனித்தால் இந்த இரண்டு நாடுகளும் ஜெர்மனியின் உட்புகுதலை எதிர்க்குமென்றும் துருக்கியும் யுத்தத்தில் கலக்கவேண்டியதாய் நேரிடுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதாலிய ராஜ்ஜிய தந்திர நிலையங்களிலிருந்து வெளியான தகவல்களை ஒலிபரப்பும் காலத்தில் அங்காராவிலுள்ள ஒலிபரப்பு நிலையம் அறிவிப்பதாவது: அமெரிக்கா ஜெர்மனியை எதிர்க்கும்படி ஒரு சங்கடம் நேர்ந்தால் அப்பொழுது ஐக்கிய நாடுகளோடு இதாலிக்கு யுத்தம் செய்வதாக அபிப்பிராயமில்லை.

பிரிடனுக்கு அமெரிக்கா உதவி செய்யும் விஷயத்தில் ஜெர்மானிய, இதாலிய பத்திரிகைகளுக்குள் அபிப்பிராய பேதங்களிருப்பதாகவும் தெரிய வருகிறது. பிரிடனுக்கு அமெரிக்கா உதவி செய்வதற்குள் பிரிடன் அபஜயமடைந்து விடுமென்று ஜெர்மன் பத்திரிகைகள் சொல்லும்பொழுது, இதாலிய பத்திரிகைகள் இந்த சம்பவம் ஏற்படக்கூடியதென்று அவ்வளவு உறுதியாய் எண்ணவில்லை. அல்பேனியாவிலும், வடஆபிரிக்காவிலும் இதாலியர்களுக்கு ஏற்பட்ட தோல்விகளினின்றும் இதாலிய பத்திரிகைகளுக்கு நல்லறிவு வந்திருக்குமென்று ஒலிபரப்புகிறது. பிரிடிஷ் முஸ்தீப்புகளின் மேன்மையையும், பிரிடிஷ் ராணுவப் படையின் அதிக வீரத்தன்மையையும் இதாலிய பத்திரிகைகள் ஒப்புக்கொண்டு இருக்கிறதென்பது முக்கியமாய் கவனிக்கத்தக்கது.

பல்கேரியாவில் ஜெர்மன் துருப்புகள் இல்லை என்று மறுக்கும் செய்திகளை எளிதில் ஒப்புக்கொள்ளக் கூடாதென்று ஜனங்களுக்கு அங்காரா ஒலிபரப்பு நிலையம் எச்சரித்திருக்கிறது.

ஜெர்மனி ஒருபடையெடுப்பை ஆரம்பிக்கலாம். அதற்குக்காரணங்கள் பின்வருபவை. இதாலியின் பலஹீனமும் இதாலிக்கு அநேகமாய் ஏற்படக்கூடிய பங்கமும்; ஆபிரிக்கா போர் முனையில் பிரிடனுக்குக் கிடைத்த வெற்றிகளும், மத்தியதரைக்கடலில் முக்கியத்வம் வாய்ந்த நிலையங்களை பிரிடன் பெற்றுவிடுவதும்; சமீபக்கிழக்கு தேசத்தில் அசைக்க முடியாத வண்ணம் நிலைநாட்டிக் கொள்ள ஈஜியன் கடலிலுள்ள தீவுகளில் பிரிடன் அரண்கள் கட்டிவிடக் கூடுமென்பதும்.

## பல்கேரியாவைச்சுற்றி ராஜதந்திர யுத்தம்
## பல்கேரியா அரசருக்கு துருக்கி, ருஷ்ய, அமெரிக்க ஆதரவு.
## கர்னல் தானவனுடைய வேலைகள்

[டெயிலிமெயில் பத்திரிகையின் பிரத்தியேக நிருபர் ஸோபியாவிலிருந்து எழுதுகிறார்].

பல்கேரியா இப்பொழுது ஒரு ராஜதந்திரப் போரில் மத்திய ரணகளமாக விளங்குகிறது. அரசர் போரிஸும், துருக்கி, ருஷ்ய, அமெரிக்க ஆதரவுகளைக் கொண்டு ஹிட்லரின் வற்புறுத்தல்களைப் பலமாக எதிர்க்கிறார்.

கிரீஸ் தேசத்தின் முதுகில் குத்துவதற்கு ஜெர்மானியப் படையை ருமேனியாவிலிருந்து பல்கேரியா வழியாகக் கொண்டுபோக அனுமதிக்கும்படி ஹிட்லர் வற்புறுத்துகிறான். அரசர் போரிஸ் திண்ணமாக "முடியாது" என்கிறார்.

இதாலி விழாமல் தடுப்பதற்காக முஸோலினிக்கு உதவி செய்ய ஹிட்லர் கொண்டிருக்கும் எண்ணங்கள் பூர்த்தியடைவது இந்தப்போரின் முடிவைப் பொறுத்ததாயிருக்கிறது.

ஸலோனிகாவில் ஒரு ராணுவ ஸ்தாபனம் ஏற்படுத்திக்கொள்ள கிரீஸுக்கு பல்கேரியா வழியாக தன் படையைக்கொண்டுபோக ஹிட்லர் எண்ணுகிறான் என்பதில் ஐயமில்லை.

அவ்வாறு செய்தால் கிரீஸை கொன்று அல்பேனியாவில் இதாலி படும் பாட்டிலிருந்து அதை விடுவிப்பதோடு, லிபியாவிலிருக்கும் இதாலிய துருப்புகளுக்கு ஆதரவாக ஏராளமான துருப்புகளை அனுப்பவும் ஸாதனமாகும்.

இந்த உபாயம் சில எதிர்பாராத இடையூறுகளை எதிர்க்கவேண்டியிருக்கிறது.

ஒன்று தன்தேசத்தின் நடுநிலையை நிலைநிறுத்திக்கொள்ள முயலும் போரிஸ் அரசர்.

மற்றொன்று அன்னாருக்கு அளிக்கப்பட்டிருக்கும் பல வல்லரசுகளின் ஆதரவு.

மேலும், ருஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் ஏற்பட்ட வணிக ஒப்பந்தத்தில் பல்கேரியாவை ஜெர்மனி தொடக்கூடாதென்று ஒரு ரஹஸ்ய ஷரத்து ஏற்பட்டிருக்கிறதென்று தெரிகிறது. மேலும், பல்கேரியப் படையெடுப்பை தன்பேரில் யுத்தந்துவங்கினதாகக் கருதப்படும் என்று துருக்கி வற்புறுத்துகிறது.

கடைசியாக அமெரிக்கப் பிரதிநிதி அமெரிக்காவுக்காக ஐரோப்பிய நிலையை பரிசீலனைசெய்ய அனுப்பப்பட்டவர், தலைவர் ரூஸ்வெல்டிடமிருந்து போரிஸ் அரசருக்கு ஒரு பிரத்தியேகத் தூது கொண்டுவந்திருக்கிறார்.

இது எதிர்பாராத இடத்திலிருந்து கிடைத்திருக்கும் புதிய ஆதரவு.

யுகோஸ்லாவியா வழியாகச்செல்லும் மற்றோர் உபாயம் ஜெர்மனிக்கு இருக்கிறது. அந்தத் தேசத்தோர் அவ்வாறு செய்வதற்குப் பதிலாக போர் புரிவார்கள்.

ஆகையால், ருமேனியாவிலிருந்து துருப்புகளை நடத்த உத்தரவளிக்கப்பட வில்லை. ஆகையால், எப்படியாவது பல்கேரியாவின் ஒப்புதலை அடைய வேண்டியது ஹிட்லருக்கு அவசியம்.

அவ்வாறு ஒப்புக்கொண்டுவிட்டால் துருக்கி படையெடுப்பது வலுவுச் சண்டையாகும். ஆகையால், ஸாம தான பேத தண்டம் முதலிய எல்லா உபாயங் களும் ஜெர்மானிய மந்திரி பல்கேரியாபேரில் செய்து பார்க்கிறார். ஆனால், எதிர்த்து நிற்கும் வல்லரசுகளின் ஆதரவு பெரிதாகயிருக்கிறது.

கர்னல்தானவனும் ஒரு நிமிஷம்கூட சும்மா இல்லை. அவர் 21ௗ பல்கேரியா வெளிநாட்டு மந்திரியை பேட்டிகண்டார். பிரதம மந்திரி பிலாப் என்பவரை மத்தியானம் பார்த்தார். பெல்கிரேட்டுக்குப் போவதற்குமுன் போரிஸ் அரசரைப் பார்த்திருப்பார்.

---

# ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

---

## A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

### யார் அதை ஆரம்பித்தது?

1914—1918-ம் வருஷத்திய யுத்தத்தில் தோற்றுவிட்ட திகில் ஜெர்மானியர் மனதை விட்டு இன்னும் அகலவேயில்லை. ஆகையால் ஹிட்லர் பேசும் போதெல்லாம் அதைப்பற்றிப் பிரஸ்தாபம் செய்யாது இருப்பது கிடையாது.

### யார் தோற்றது?

இருந்தபோதிலும் சமீபத்தில் இதைப்பற்றிப் பேசும்போது நினைவில்லாது, ஒரு தவறுதல் செய்துவிட்டார். ஜெர்மன் சைனியம், ஜெர்மன் ஜனங்கள், ஜெர்மன் கவர்ன்மெண்டு ஆக எல்லோர்களும் சென்ற யுத்தத்தில் அபஜயப்பட்டு, மனமொடிந்து விழுந்துவிட்டார்கள் என்று ஆரம்பத்தில் சொல்லிவிட்டு, பிறகு சென்ற யுத்தத்தில் தோற்கவேயில்லையென்று அதை மறைத்து மாற்றிக் கொண்டார்.

உண்மையில் சென்ற யுத்தத்தின் முடிவில், அதாவது, 1918-ம் வருஷத்தில், ஜெர்மனி தோற்றுத்தான்போய்விட்டது. 1916, 1917-ம் வருஷங்களில் பலம் குறைந்து, பிறகு, 1918-ல் 100-நாட்கள் நடந்த கோரயுத்தத்தில், பிடிக்கப் பட்டும், கொல்லப்பட்டும், காயப்பட்டும், ஓடியும் சைனியத்தில் பாதியை இழந்து விட்டது. ஜெர்மன் சைனியம் அப்பொழுது ஆர்டன் என்ற போர்முனையில் நின்றது. தந்திரமாக அதை மறித்துக்கொண்டு, இரண்டு பாதியாகப் பிளந்து, ஒரு பக்கமும் நகரமுடியாமல் நெருக்கப்பட்டது. அடியோடு சேதமாகாதபடி காப்பாற்றிக்கொள்ள ஜெர்மனி சரணாகதி செய்து சமாதானத்தைக்கோரிற்று. கப்பற் படையும், சைனியமும், பிரஜைகளும் அபஜயத்தின்பின் கலகம் செய்தார்களே ஒழிய, அதற்கு முந்தியே செய்துவிடவில்லை.

## அடக்கம் ஏது: ஜம்பம்தான்.

பதட்டப்படாமல், அமைதியாக, வார்த்தைகளைக் கொட்டிவிடாமல் ஹிட்லர் யுத்தத்தில் ஜயிக்கப்போவதாக உறுதிமொழி கூறிவிட்டாராம்; பிரிடனே, கேவலம், உத்தியோகஸ்தர்களைக்கொண்டு மேலெழுந்தபடி தனக்கும் ஜயம் வரப்போவதாகச் சொல்லிக்கொள்ளுகிறதே ஒழிய நம்பிக்கையேற்படும்படி சொல்லவில்லையாம்.

ஆனல் ஹிட்லர் பிரசங்கங்களில் அடக்கமென்பது கிடையாதென்பது உலக மறிந்த விஷயம். பிரான்ஸைப் பிடித்தபோது இனி பிரிடன் சண்டையை நிறுத்திவிடும் என்றும், ஜெர்மனிக்குள் பிரிடிஷ் விமானங்கள் வரமுடியாதென்றும், ஸெப்டம்பர் மாதத்திலேயே லண்டன் நகரத்துக்குள் பிரவேசித்துவிடப்போவதாயும், கிறிஸ்மஸோடு சண்டை நின்றுவிடுமென்றும் பலவாருகப் பீத்திக்கொண்டதெல்லாம் இப்பொழுது வீணய்ப்போய்விட்டது.

## சகோதர பாவமாம்!

ஹிட்லர் அதிகாரத்துக்குவந்து 8 வருஷங்களாகி, சமீபத்தில் நடந்த 8-ம் வருஷக்கொண்டாட்டத்தை மனமுவந்து பாராட்டி, ஜெர்மானியருக்கும் இதாலியருக்கும் லௌகீக, ஆத்மீக காரியங்களில் நெருங்கிய ஒத்துமை இருப்பதாக இதாலிய பத்திரிகைகள் எழுதியிருப்பதாக ஜெர்மனி ஒலிபரப்பியிருக்கிறது.

ஆனல் ஜெர்மன் துருப்புக்களும், ரகசியப் போலீஸும் இதாலிக்குள் சென்ற வாரம் வந்தபோது, டியூரின், வெரோன, மிலான், டிரீஸ்ட், ரோம் முதலிய நகரங்கள் ஏன் கலகம் செய்தன? மேலும், இச்செய்திகளை வெளியிட்ட அமெரிக்க நிருபர்களிருவர்களை ஏன் யுகோ ஸ்லோவ் அரசாங்கம் சிக்ஷித்தது? ஜெர்மனிக்கும் இதாலிக்கும் உள்ள நேயம் காதலர்களுடைய மோகம் போல் ரகஸ்யமாயிருக்க வேண்டுமோ?

## படுயுக்தி: பின் யோசனை.

அட்லாண்டிக் மகாசமுத்திரத்தில் பிரிடிஷ் கப்பல்கள் போகாது தடுக்கப்பட்டு விட்டதாகவும், அமெரிக்காவுக்கு ஸ்தானிகராகப் போயிருக்கும் ஹாலிபாக்ஸ் பிரபுவுக்கு ஆபத்து வரப்போகிறதென்றும் அச்சு நாடுகள் பயமுறுத்தியும், புதிதாய்க்கட்டப்பட்ட '5-ம் ஜார்ஜ்' என்ற யுத்தக் கப்பலில் அவர் அமெரிக்காவுக்கு பத்திரமாய்ச் சென்று விட்டதில் எதிரிகளுக்கு மனக்கலக்கம் ஏற்பட்டுவிட்டது. ஒரு நாள் முழுவதும் யோசனை செய்து ஜெர்மனி பிரிடனுடைய கடலாதிக்கம் போய்விட்டதாக ஒலிபரப்பியது. ஆனல் ஹாலிபாக்ஸ் பிரபு அமெரிக்கா சேர்ந்ததிலிருந்து பிரிடனுக்கு கடல் ஆதிக்கம் போகவில்லையென்றுதான் எவரும் முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது.

இதாலியோ இதைப்பற்றி இரண்டு நாட்கள் யோஜித்து, 'பாருங்கள்! பார்டியாவிலும், டோப்ருக்கிலும் இதாலிய சிப்பாய்கள் எவ்வளவு சாவதானமாயும், பொறுமையோடும் சண்டை செய்தார்கள்; ஆனால் ஹாலிபாக்ஸ் பிரபு பயந்துகொண்டு, ஓட்டம் பிடித்து அமெரிக்கா சேர்ந்தார்' என்று ஒலிபரப்பி இருக்கிறது.

---

## B—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

---

### பொய் அபாயச் செய்தியை அனுப்புகிறார்கள்.

டாகார் துறைமுகத்துக்கு 200 மைலுக்கு அப்பால் 'எம்பிரஸ்-ஆப்-ஆஸ்டிரேலியா' என்ற பிரிடிஷ் கப்பல் ஆபத்திலகப்பட்டுக்கொண்டதாகத் தந்தி வந்ததாக ஜெர்மனி ஜனவரி 18-ம் தேதி ஒலிபரப்பியது. இது, இந்தக் கப்பல் இருக்கும் இடத்தைத் தெரிந்துகொள்ள ஜெர்மனி செய்த யுக்தியாகும். ஏனென்றால் தந்தி வந்ததாகச் சொல்லும் சமயத்தில் இந்தக் கப்பல் துறைமுகத்திலேயே பத்திரமாக நின்றுகொண்டிருந்தது.

### ஜெர்மனியின் தற்புகழ்ச்சி.

பொய்யை இட்டுக்கட்டுவதிலும், சிறிதைப்பெரிதாக்கிச் சொல்லுவதிலும் இனி டாக்டர் கோயபெல்ஸைவிட உலகில் வேறு எவரும் கிடையாது. பிரிடனுக்கு வரும் கப்பலெல்லாம் அமிழ்க்கப்படுகிறதென்று பிரிடிஷ் விவசாய இலாகா மந்திரியே ஒப்புக்கொண்டுவிட்டதாக இந்துஸ்தானியில் ஜனவரி 27-ல் ஒலிபரப்பப்பட்டது. என்ன பொய்! 1939-ஐ விட 1940-ல் 10 மாதங்களில் 100-க்கு 33 பங்கு அதிகமாக வெளிநாட்டுச் சரக்குகள் பிரிடனுக்கு இறக்குமதியாயிருக்கின்றன.

---

# இங்கிலாந்தில் யுத்த சேவைக்காக ஸெயிண்ட் ஜான் சங்கமும் ரெட் கிராஸ் சங்கமும் ஒன்றுபட்டு உழைத்தல்.

---

### யுத்தத்தில் சிறைப்பட்டவர்களுக்குச்செய்யும் பணிவிடைகள்.

இவ்விரண்டு சங்கங்களும் துணிந்து செய்யும் சகல வேலைகளிலும் எதிரிகளால் கைது செய்யப்பட்டு சிறையிலிருப்போருக்குச் செய்யும் சகாய முறைகளே மிகவும் உருக்கமானவை. இவ்வித ஊழியத்தை நடத்தும் ஆங்கிலர் ஜெனிவா

பட்டணத்தில் அமைத்துள்ள சர்வ ராஜ்ஜியங்களின் ரெட் கிரூஸ் சங்கத்துடன் சேர்ந்து சகலமும் செய்கிறார்கள். இவர்கள் சகாயம் அனுப்புவதைப் பெற்றுக் கொண்டு சந்தோஷமான பதில், போஸ்டு கார்டுகளில் எழுதி, சிறை வீரர் அனுப்புகிறார்கள். சர்வ ராஜ்ஜியங்களின் ரெட் கிரூஸ் சங்கத்தின் சட்டங்களுக்கு இணங்கி, போர்புரியும் சகல தேசத்தாரும், சிறைக்கூட்டங்களில் ஆங்காங்கு, கைதிகளின் க்ஷேமலாபத்தைத் தெரிவிப்பதற்கான இயக்கியங்கள் ஏற்படுத்தி யிருக்கின்றார்கள். இவ்விஷயத்தில் ஜெர்மானியர் தவருதலின்றி நடந்துகொண் டிருக்கின்றனர். சர்வ ராஜ்ஜியங்களின் பிரதிநிதிகளடங்கிய, ஜெனிவா ரெட் கிரூஸ் நடுநிலைமை வகிக்கும் நிலையான ஓர் விசாரணைச்சங்கம் என்பதை நாம் நன்றாய் அறியவேண்டும். யாவருக்கும் சரிசமமாய், வஞ்சனையில்லாமல், உதவி புரியும்படி வெகு ஜாக்கிரதையாயிருக்கிறார்கள். சிறையாளருக்கு, புஸ்தகங்கள் பங்கிட்டு அனுப்புவதிலும், தேவையான பொருள்கள் சப்ளை செய்வதிலும், தேக அப்பியாச வசதிகள் உண்டுபண்ணுவதிலும் கருத்தாயிருக்கின்றனர். சிறை யிருப்பினால் தேகம் தளர்ந்து நோய் கொள்பவர் உண்டானால், அவர்களை வேறு ஊர்களுக்கு அனுப்பிவைக்க வைத்தியர் சொல்வதற்கிணங்கி, அதற்கான முயற்சி களை எடுத்து நடத்திவைக்கிறார்கள். சமர்புரியும் சர்க்கார் அதிகாரிகளுக்கு, இப்படிப்பட்ட நுண்ணிய விபரங்களைக் கவனிக்கச் சமயமில்லையாதலால் இந்த பகுதியார் அப்பொருப்பை ஏற்றுக்கொண்டனர். ஆங்கிலருக்கானாலும், நேசப் படையாளருக்கானாலும் சிறைப்பட்டவர்களுக்கு ஆதரவளிக்கும் பொருப்பாளர் மாதாமாதம், உணவுப் பண்டங்கள் அனுப்ப அனுமதி பெற்றிருக்கின்றனர். இவ்வித சகாயத்திற்காகக் கடந்த யுத்தத்தில் சற்றேறக்குறைய 4 கோடி பவுன் கள் செலவழித்தார்கள். இப்பவும் கூட்டுறவு சங்கத்தின் இப்பகுதியார், ஜெனிவா நகரிலுள்ள சர்வ ராஜ்ஜியங்களின் ரெட் கிரூஸ் சங்கத்திற்கு 9,000 பவுன்கள் அனுப்பியிருக்கிறார்கள். இந்தச் சங்கத்திற்கு, சிறைப்பட்டிருக்கும் வீரர்களின் பேர்கள், ஸ்விட்ஸர்லாந்தில் கிடைத்த மாத்திரத்தில், தனித்தனியே கைதிகளுக்கு எழுத வசதி கிடைக்கும் வரையில், ஜெர்மனியிலுள்ள பொருப் பாளிகளான சிலரிடம் இவைகளைப் பங்கிட்டுக்கொடுக்கும்படி அனுப்புகிறார்கள். பின்பு காத்திருந்து ஜெனிவாவிலுள்ளவர்கள் உடனே சமாசாரம் சொல்லிவிடு கிறார்கள். இங்கிலாந்தில் சிப்பங்கள் கட்டி அனுப்பும் நிலையங்கள், அநேகம் ஏற்படுத்தியிருக்கின்றனர். யுத்த சேவை கூட்டுறவு அமைப்பார், சிறைப் பட்டோருக்கு அனுப்பும் பற்பல சிறு வெகுமானங்களுடன், 74,000 பவுன்களும் அனுப்பியிருக்கிறார்கள்.

யுத்தத்தில் கைது செய்யப்பட்டவர்கள் யாராயினும் ஒரே விதமாய்ப் பாராட்டி வருகின்றார்கள். சிறைக்கூட்டத்தில் சேர்ந்த ஒரு வாரத்திற்கெல்லாம், கைதி, தன் இனத்தாருக்கு ஓர் போஸ்டு கார்டு எழுதலாமாம். ஜெர்மனியிட முள்ள ஆங்கில சிறையாளர் ஆபீஸர்களானால் மாதம் 3 கடிதங்களும், 4 கார்டு களும், மற்றும், வீரர்களானால் 2 கடிதங்களும், 3 கார்டுகளும், பாமரர்கள் 3 கடிதமும், 4 கார்டுகளும் எழுத அனுமதி பெற்றிருக்கின்றனர். தபால் செலவு கிடையாது.

## உடுப்பு வகைகள்.

சோப்பு முதலிய வாசனை சாமான்களும் ஆடைகளும், 10 பவுன் நிறைமட்டு மிருக்கக்கூடிய சிப்பங்களாய், யுத்தசேவை கூட்டுறவு அமைப்பார் மூலமாய் அனுப்பலாம், சகலரும் அத்தியாவசியமானவைகளைக் கொடுத்து, பின்பு தங்கள் உறவினருக்கும் கம்பளி உடுப்புகள் ரெட் கிருஸ் சங்கத்தார் கொடுத்து ஆதரிப்பார்கள் என்று, தாமாய் ஒன்றும் அனுப்பமுடியாதபடி ஏழைகள் ஆறுதலடைகின்றனர். கம்பளி ஆடைகள், போர்வைகளைச் சேகரிப்பதிலும், வாங்குவதிலும் அதிக சிரமமுண்டு, என்றபோதிலும் அன்பின் அறிய ஊழியமாய் இவைகளை விடாது செய்துவருகின்றனர். அநேகர் ஓர் கைதியை தத்தெடுத்து, அந்த மனிதனுக்கு வேண்டிய சகல சாதனங்களையும் கொடுத்துதவுகிறார்கள்.

## தின்பண்டங்கள்.

ஆகாரச் சட்டப்படி, வைத்தியன் நிர்ணயிக்கிற பிரகாரம் மட்டும், தின் பண்டங்கள், ரூ 6-க்குச் சமமான, 10 ஷிலிங் விலை பொருமானவை, சிப்பங்களில் வாராவாரம் அனுப்பலாம். புத்தகங்கள், பத்திரிகைகள், சங்கீதங்கள், விளையாட்டுக்கருவிகள், முதலியவை, கைதிகள் ஆதரவுக்காக அனுப்புகிறார்கள். கல்வி இலாகா என்ற பிரிவிலிருந்து, வேண்டியவர்களுக்கு ஏற்ற புஸ்தகங்களைத் தெரிந்தெடுத்து அனுப்புகிறார்கள். நேரே விற்க அனுமதி பெற்ற சிலர் அறிய நூல்களை அவர்களுக்கு அனுப்புகிறார்கள். கைதிகளின் தலைமை ஆபீஸருக்கு சகல சிப்பங்களையும் அனுப்புகிறார்கள். இவைகளில் பலகீனருக்கேற்ற, பத்திய ஆகாரங்கள், ஆடைகள், போர்வைகள், மற்றும் பலன்தரும் ஔஷதங்கள், அடங்கியிருக்கலாம். சில வியாபாரிகள் இவைகளை நேரே அனுப்பவும் சட்டமுண்டு. 75 சிகரெட்டுகள் அல்லது அதன் நிறை புகையிலையும் கொடுக்கலாம். இனத்தார் தாம் நேரே அனுப்பவும் சில சமயங்களில் வழியுண்டு. இந்த விதமாய் அனுப்ப அநேகர் பொருளுதவி செய்வது அவசியம். இதற்காக நன்கொடை அனுப்பப் பிரியப்பட்டோர், கவர்னரின் யுத்த நிதிக்கு, சிறைப் பட்டோருக்கு என்று குறிப்பிட்டு அனுப்பலாம்.

# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

## பிரஸங்கம் XXXI.

| 1941— | | | | மணி. |
|---|---|---|---|---|
| பிப்ரவரி 15, | சனிக்கிழமை | டவுன் ஹால் | மாலை | 6.30 |
| 16, | ஞாயிற்றுக்கிழமை. | ஆவூர் | காலை | 9.45 |
| | | திருக்கோகர்ணம் | மாலை | 5.30 |
| 17, | திங்கட்கிழமை | காலேஜ் (B) தமிழ் | காலை | 10.25 |
| | | ராணி பெண்பாடசாலை | ,, | 10.25 |
| | | ராமச்சந்திரபுரம் | மாலை | 5.30 |
| | | வேந்தம்பட்டி | ,, | 5.30 |
| 18, | செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் | காலை | 10.25 |
| | | கொப்பனாபட்டி, பெண்பாடசாலை | மாலை | 5.30 |
| | | ஆலங்குடி | ,, | 5.30 |
| 19, | புதன்கிழமை | ராங்கியம் | ,, | 5.30 |
| | | ஆதனக்கோட்டை | ,, | 5.30 |
| 20, | வியாழக்கிழமை | விராலிமலை | ,, | 5.30 |
| 21, | வெள்ளிக்கிழமை | C.S.M. பள்ளிக்கூடம் | காலை | 10.00 |

## பிரஸங்கம் XXXII.

| | | | | |
|---|---|---|---|---|
| 22, | சனிக்கிழமை | டவுன் ஹால் | மாலை | 6.30 |
| 23, | ஞாயிற்றுக்கிழமை. | ராசியமங்கலம் | காலை | 9.45 |
| | | காலேஜ் (A) ஆங்கிலம் | ,, | 10.25 |
| | | ராணி பெண்பாடசாலை | ,, | 10.25 |
| 26, | புதன்கிழமை | காலேஜ் (B) தமிழ் | ,, | 10.25 |
| | | பெருங்களூர் | மாலை | 5.30 |
| | | விராச்சிலை | ,, | 5.30 |
| 27, | வியாழக்கிழமை | C.S.M. பள்ளிக்கூடம் | காலை | 10.00 |
| | | சேரி பள்ளிக்கூடம் | மாலை | 5.30 |
| | | பொன்னமராவதி | ,, | 5.30 |
| | | கோனாபட்டு | ,, | 5.30 |
| | | கீழாநிலை | ,, | 5.30 |
| | | ராயவரம் | ,, | 5.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—15-2-41.